பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 13 புதன்கிழமை (29-08-2001) தொலைபேசி: 3378 ஒலி: 261

## சங்கிலியன் படையின் துண்டுப் பிரசுரத்தை 'வலம்புரி'ப் பத்திரிகையே வெளியிட்டது!

### ஐ.பி.சி, ரி.பி.சி ஊடகங்களுக்கு மகேஸ்வரன் எம்.பி. பேட்டி

(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களுக்கு முன் "பாராளுமன்றப் பதவிகளைத் தூக்கி எறியுங்கள்" என்ற தலைப்பில் சங்கிலியன் படையால் விடுக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து வலம்புரிப் பத்திரிகையே வெளியிட்டதாக ஐக்கியதேசியக்கட்சியின் யாழ். மாவட்ட எம்.பி. தி. மகேஸ்வரன் குற்றஞ் சாட்டியுள்ளார்;

இது தொடர்பாக அவர் நேற்று இலண்டன் ஐ.பி.சி., ரி.பி.சி. ஆகிய செய்தி ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. கட்சியின் ஆதரவுடன் வெளிவரும் வலம்புரிப் பத்திரிகை ஆசிரியர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நேரடி ஆலோசனையின் படி இத்துண்டுப் பிரசுரத்தைத் தயாரித்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் முக்கியஸ்தர்களுக்கும் அனுப்பி வைத்ததாகவும் தமிழ் எம்.பிக்களை பதவி விலகவைப்பதில் வலம்புரி முனைப்பாக இருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

சங்கிலியன் படை என்ற பெயரில் பாராளுமன்றப் பதவியைத் தூக்கி எறியுங்கள்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த வியாழக்கிழமை குருநகர்ப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது தம்மிடமிருந்தகுண்டை வெடிக்க வைத்து,

★ லெப்டினண்ட் இளங்குமரன்
(அன்ரனி அன்ரன் ஜோன்சன் யாழ். மாவட்டம்)

★ 2 ஆம்லெப்டினண்ட் நகுலன்
(அரியநாயகம் ஜேசுதாசன் மன்னார் மாவட்டம்)

ஆகிய போராளிகளும், கடந்த ஞாயிற்றுக்கிழமை முகமாலைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது,

(8 -ம் பக்கம் பார்க்க)

## ● இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள

# வவுனியாவில் கிளைமோர் வெடி;

# ஐந்து படையினர் உடல் சிதறிப் பலி!

## புலிகளின் தாக்குதல் தொடரலாம்!

(வவுனியா நிருபர்)

வவுனியா கல்மடுகிடாய்ச்சோரி வீதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகர கிளைமோர்த் தாக்குதலில் இராணுவ உழவுயந்திரம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த ஐந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலே உடல் சிதறிப் பலியானார்கள்.

இத் தாக்குதலின் போது படையினர் சென்ற உழவுயந்திரம் வெடித்துச் சிதறியது.

கல்மடு கிடாய்ச்சோரி வீதி வழியாக முன்னணிக் காவலரணிலுள்ள இராணுவத்தினருக்கு உணவுப்பொருட்களை எடுத்துச் சென்ற இராணுவ உழவுஇயந்திரம் கிளைமோர் தாக்குதலில்சிக்கிச் சிதறியது. இதனால் அதில் பயணம் செய்தஅனைத்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர்;

இக்கிளைமோர்த்தாக்குதல் றிமோட்கொன்றோல் மூலம் மேற்கொள்ளப்பட்டதாகத்

[8-ம் பக்கம் பார்க்க]

## எதிர்க் கட்சி எம். பிக்கள் இன்று சபாநாயகருடன் சந்திப்பு

(கொழும்பு)

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவை இன்று எதிர்க் கட்சித்தலைவர் மற்றும் எம். பிக்களும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

செப்ரெம்பர் 7ம் திகதி பாராளுமன்றம் கூட்டப்படும் போது அதனை ஒத்திவைக்காமல், நம்பிக்கை இல்லாப்பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் தம்மிடம் உண்டு என்றும் 115 எம். பிக்களும் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவிடம் கூறவுள்ளனர்.

(வ)

## ★ வலம்புரி ஆசிரியர்களை ★

## கடலில் தத்தளித்தவர்களை காப்பாற்றிய கப்பல்

# புலிகளின் தாக்குதல் தொடரலாம்!

(வவுனியா நிருபர்)

**வவுனியா கல்மடுகிடாய்ச்சோரி வீதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகர கிளைமோர்த் தாக்குதலில் இராணுவ உழவுயந்திரம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த ஐந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலே உடல் சிதறிப் பலியானார்கள்.**

**இத் தாக்குதலின் போது படையினர் சென்ற உழவுயந்திரம் வெடித்துச் சிதறியது.**

கல்மடு கிடாய்ச்சோரி வீதி வழியாக முன்னணிக் காவலரணிலுள்ள இராணுவத்தினருக்கு உணவுப்பொருட்களை எடுத்துச் சென்ற இராணுவ உழவுஇயந்திரம் கிளைமோர் தாக்குதலில்சிக்கிச் சிதறியது. இதனால் அதில் பயணம் செய்தஅனைத்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர்:

இக்கிளைமோர்த்தாக்குதல் றிமோட்கொன்றோல் மூலம் மேற்கொள்ளப்பட்டதாகத்

[8-ம் பக்கம் பார்க்க]

# எதிர்க் கட்சி எம். பிக்கள் இன்று சபாநாயகருடன் சந்திப்பு

(கொழும்பு)

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவை இன்று எதிர்க் கட்சித்தலைவர் மற்றும் எம்: பிக்களும் சந்தித்துப் பேசவுள்ளனர்:

செப்ரெம்பர் 7ம் திகதி பாராளுமன்றம் கூட்டப்படும் போது அதனை ஒத்திவைக்காமல், நம்பிக்கை இல்லாப்பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் தம்மிடம் உண்டு என்றும் 115 எம். பிக்களும் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவிடம் கூறவுள்ளனர்.

(வ)

# ★ வலம்புரி ஆசிரியர்களை ★

# கொலை செய்யப்போவதாக மகேஸ்வரன் எம். பி. மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

சங்கிலியன் படையால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தை வலம்புரி பத்திரிகையே வெளியிட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் எம். பி. தி. மகேஸ்வரன் நேற்று முன்தினமிரவு வலம்புரிப் பத்திரிகை ஆசிரியர்களைக் கொலைசெய்யப் போவதாக தொலைபேசி மூலம் பயமுறுத்தியுள்ளார்: மிகக் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பிரயோகித்த மகேஸ்வரன் எம். பி. எவ்வளவு பணம் செலவானாலும் தனது அடியாட்களைக் கொண்டு கொலை செய்யப் போவதாக எச்சரிக்கை விடுத்தார்:

இது தொடர்பாக வலம்புரி நிர்வாகம் ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவுக்கும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கும் தெரியப்படுத்தவுள்ளது இதேவேளை கடந்த

→ 2ஆம் பக்கம் பார்க்க

# கடலில் தத்தளித்தவர்களை காப்பாற்றிய கப்பல் கடத்தப்பட்டது

(கொழும்பு)

இந்தோனேசிய கடற் பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கையர் உட்பட 435 அகதிகளைக் காப்பாற்றிய நோர்வேக் கப்பல் மாலுமிகளை மிரட்டி மேற்படி அகதிகள் கப்பலை பலவந்தமாக அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிற்கு கடத்திச் சென்றனர்:

இந்தோனேசியாவிலிருந்து அரசியல் தஞ்சம்கோரி அவுஸ்ரேலியாவுக்கு சென்ற சமயம் இயந்திரக்கோளாறு காரணமாக தத்தளித்து கூக்குரலிட்ட 435 அகதிகளைக் காப்பாற்றிய நோர்வேக் கப்பலுக்கே இக்கதி நிகழ்ந்துள்ளது.

இதேவேளை மேற்படி அகதிகளைத் திருப்பி அனுப்பப் போவதாக அவுஸ்ரேலிய அரசு அறிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-4)

# பொ. ஐ. ஐ. மு. - ஐ. தே. கட்சி பேச்சு தேசிய நல்லிணக்க அரசு புஷ்வாணம்

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது தொடர்பாக பொதுஜனஐக்கியமுன்னணிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையே நேற்று இடம் பெற்ற இறுதிச்சுற்றுப்பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் கே. என். சொக்ஸியும் அரசு சார்பில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையில் நேற்று நான்காவது தடவையாக பிற்பகல் 3-30 மணி முதல் 6-50 மணிவரை இடம்பெற்ற பேச்சுவார்த்தை முடிவு எதுவும் எட்டப்படாத நிலையில் தோல்வியில் முடிவடைந்துள்ளது:

(8ம் பக்கம் பார்க்க)

# திவ்வியனை அவரது தாயார் மாதத்தில் ஒருதடவை பார்வையிட அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலை கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் நேற்று 28/8/2001 யாழ் நீதிமன்றில் நீதிவான் இ. த. விக்கினராஜா முன்னிலையில் ஆஜரானார்:

சந்தேக நபர் சார்பில் ஆஜரானசட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கம் சந்தேக நபரின் தாயார் யாழ் சிறைசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தன்மகனை மாதம் ஒரு முறைசென்றுபார்வையிட வல்வெட்டித்துறை பொலிசாரிடம் அனுமதிக் கடிதம் கேட்டபோது பொலிஸ் பொறுப்பதிகாரி மறுத்துள்ளதாக மன்றில் தெரிவித்தார்:

இவ் விடயம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரியை அடுத்தமாதம் 11ம்திகதி மன்றிற்கு அறிக்கை சமர்

→ 8 ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஈ. பி. டி. பியின் சேவை தேவையா என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்!

## விளையாட்டு வீரர்கள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

ஆயுதப்போர் தொடங்குவதற்கு முன்பு மக்கள் எல்லோரும் வாழ்ந்திருந்த சுமூகமான சூழ்நிலைக்கு திரும்பி அதிலிருந்து எமது மக்கள் முன்னேறவேண்டும். முன்னேற்றத்தில் புதிய எல்லைகளைத் தொடவேண்டும். இதற்காகவே ஈ.பி.டி.பியினராகிய நாங்கள் பாடுபடுகின்றோம். இதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற பதினேழாவது தேசிய தடகள விளையாட்டு விழாவில் பங்குபற்றிய விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் முகமாகவும், வெற்றிபெற்று புதிய சாதனைகளை நிலைநாட்டிய வீரர்களைப் பாராட்டும் முகமாகவும், நடைபெற்ற வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவ்வுரையில் உங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி இருக்கிறீர்கள் உங்களுக்குப் போதிய கால அவகாசம் இல்லாமல் இருந்திருக்கலாம். போதுமான பயிற்சி வசதிகள் கிட்டாமல் இருந்திருக்கலாம். ஆனால் இத்தடைகளைக் கடந்து செல்ல மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரின் முயற்சியும் உங்களின் ஒத்துழைப்பும் பயன்பட்டுள்ளது.

இவ்வாறான ஒன்றுபட்ட உழைப்புக்கள் வெற்றியைத் தேடித்தரும் என்பதுவே எமது எதிர்பார்ப்பு. எனினும் எங்களை நோக்கி சங்கிலியன் படைகளின் எச்சரிக்கைகள் வருகின்றன. இவற்றை நாம் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. எங்கள் சேவை தேவையானதா இல்லையா என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும் மக்களுக்கு உதவுவதற்காகவே எமக்குப் பலம் தேவைப்படுகிறது. அதற்காகவே எமக்கு அதிகாரம் தேவைப்படுகின்றது எனவும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் யாழ் மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் [ஜெகன்] உரையாற்றுகையில் இந்த வெற்றிக்கேடயங்களை பார்க்கும் போது உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் எம்மவர்கள் ஈட்டி வருகின்ற வெற்றிகளை எமது மண்ணில் இருக்கின்ற ஊடகவியலாளர்கள் கண்டு கொள்வதாக இல்லை. இத்தகைய வெற்றிகளைப் பாராட்டுவதாகவும் இல்லை.

இந்த வெற்றிகள் அழிவுக்கு வழிகாட்டவில்லை மாறாக உங்களது எதிர்காலம் பிரகாசிக்கவும் உதவுகிறது எனக் கூறினார்.

இவ் வைபவத்தில் மாகாண மட்ட போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் கேடயங்களும் வழங்கப்பட்டதுடன் பாராட்டு சான்றிதழும் ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டது. மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ரூபசிங்கம், கப்டன் ஏ.எஸ் குணசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ந)

## கைதான 11 பேர் நேற்று நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வரணிப் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 4ந் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட ஏழு பேர் நேற்று யாழ் நீதிமன்றில் நீதிபதி இ. த. விக்கினராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக தெரிவித்து ஏழு ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் மன்றில் காட்டப்பட்டன.

வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி ஆயுத உபகரணங்களை அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன், வழக்கினை அடுத்த மாதம் 11ந் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது. [இ-6]

## தவில் வித்துவான்களை தாக்கி நகை அபகரிப்பு

### பட்டப் பகலில் கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

மலேஷியாவில் இருந்து கொழும்பு வந்துள்ள பிரபல தவில் வித்துவான் அளவெட்டி முருகதாஸ் அவரது உதவியாளர் பிரசாத் ஆகிய இருவரும் ஆட்டோவில் வந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்றினால் கடத்தப்பட்டு படுமோசமாகத் தாக்கப்பட்டபின் அவர்களிடம் இருந்த பெறுமதி மிக்க தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டு பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதற்காக தவில் கலைஞர்கள் கொழும்பு வந்திருந்தனர்.

தவில் வித்துவான் அளவெட்டி முருகதாஸ் உதவியாளர் பிரசாத் ஆகிய இருவரும் பம்பலப்பிட்டியில் பஸ்ஸுக்காக காத்திருந்த வேளையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றது.

ஆட்டோவில் வந்தவர்கள் தம்மை சி ஐ. டி.யினர் என்று தெரிவித்தே இத்துணிகரக் கொள்ளையை நடத்தியிருப்பதாக பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ)

## காரைநகர் கடற்படைதள பாதுகாப்பு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படைத் தளத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் காரைநகரை சூழவுள்ள கடற்பரப்பையும் கடற்படையினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

காரைநகர் கடற்படைதளம்மீது புலிகள் தாக்குதல் நடத்தலாம் என புலனாய்வு துறையினருக்கு கிடைத்த தகவலையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரியவருகின்றது.

காரைநகரை அண்டிய கடற்பரப்பில் வாட்டர் ஜெட் படகுகள் உட்பட கடற்படையினரின் பீரங்கி ரோந்து படகுகள் 24 மணி நேர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக அவ்வூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதே சமயம் காரைநகரின் கோவளம், ஆலடி, களபூமி, வலந்தலைப்பகுதிகள் கடற்படையினரால் அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேநேரம் வெளியிடங்களிலுள்ள காரைநகரைச் சேர்ந்தவர்கள் அங்கு சென்றுவருவதற்கு இறுக்கமான கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன

கடந்த சில தினங்களாக தீவுப்பகுதிகளை அண்டிய இடங்களை விமானப்படையினரின் யுத்த விமானங்கள் தாழப்பறந்துகண்காணிப்பில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. [இ-4]

## அடைக்கல மாதா கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

அடைக்கலமாதா தேவாலயத்தின் திருநாள் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தினமும் மாலை 5 மணிக்கு நவநாள் வழிபாடுகள் நடைபெற்று மாதாவின் பிறந்த தினமான செப்டெம்பர் மாதம் 8 ம் திகதி திருநாள் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

(இ-4)

## இன்று கொடுப்பனவு

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் இன்று புதன் கிழமை வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணமாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றும் 867 பேருக்கு இந்த மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேற்படி முன்பள்ளி ஆசிரியர்களை இன்றுகாலைசமுகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வலிகாமம் லீக்கில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகத்தினால் நவாலி அட்டகிரி விளையாட்டுமைதானத்தில் நடத்தப்படும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாகம் கிராம முன்னேற்றக்கழகமும் அராலி பாரதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (வ)

## உரும்பிராயில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்குப் பகுதியிலுள்ள காளி கோவில் ஒன்றில் நேற்று முன்தினமிரவு திருடர்களால் கோவில் திருப்பணி உண்டியல் உடைத்து திருடப்பட்டுள்ளது.

இதேவேளை இதற்கருகிலுள்ள கடையொன்றில் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டவேளை அவ்வூர் மக்கள் விழித்துக் கொண்டதனால் இம்முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ- 4)

## மிதிவெடி தடுப்பு கருத்தரங்கு

[கோப்பாய்]

மிதிவெடி அபாய விழிப்புணர்வு கருத்தரங்கொன்று கோப்பாய் தெற்கு உதயதாரகை சனசமூக நிலையத்தில் அப்பகுதி கிராம உத்தியோகஸ்தர் எஸ். தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

மிதிவெடி அனர்த்தத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து இக்கருத்தரங்கில் மக்களுக்கு யாழ் செயலக மிதிவெடி அபாய தடுப்பு பிரிவு உத்தியோகஸ்தர்நேசன் விளக்கமளித்துள்ளார்.

[இ]

## கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலங்களில் வலம்புரிப்பத்திரிகைக்கு தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட அநாமதேய பயமுறுத்தல்கள், எச்சரிக்கைகள் எல்லாம் எங்கிருந்து விடுக்கப்பட்டதென்பதை உணர முடிகிறது.

(ந)

## பட்டிருப்புப் பிரதேசத்தில் சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பட்டிருப்பு மற்றும் குருமண்வெளிப் பிரதேசங்கள், நேற்று அதிகாலை முதல் நண்பகல்வரை விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டது

இப்பகுதிகளில் பெருமளவில்படையினர் குவிக்கப்பட்டு, நடத்தப்பட்ட தேடுதலில் முகமூடி நபர்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேற்படி பகுதி மக்களுக்கு ஒலிபெருக்கிமூலம்15வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் குருமண்வெளிப் பிரதேசத்துக்கு வருமாறு படையினர் உத்தரவு பிறப்பித்து, அங்கு வைத்து மக்களைகடுமையான சோதனைக்கு உட்படுத்தினர்.

(இ)

## அரச ஊழியர்களுக்கு 500 ரூபா சம்பள உயர்வு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளம் 500 ரூபாவால் அதிகரித்திருப்பதாக பொது நிர்வாக அமைச்சுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பள அதிகரிப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்று அமைச்சில் இடம்பெற்றதாகவும், இவ் விடயம் குறித்த அறிவித்தல் இன்னும் சில நாட்களுக்குள் வெளியிடப்படுமென்றும், பொதுநிர்வாக அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி, கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதளான டெயிலிமீரர் செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## ஆசிரியர்களுக்கு கடன் வழங்க கல்வி அமைச்சிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு இடர்காலக் கடன்களையும், வீடமைப்புக் கடன்களையும் முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறு இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்தவிடம் கோரிக்கைவிடுத்துள்ளது.

ஆசிரியர்கள் மேற்படி விடயம் குறித்து இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கத் தலைவர் பன்னாசேகரா தேரர் கருத்துத் தெரிவிக்கையில்:

ஆசிரியர் ஒருவர் தனது பத்துமாதச் சம்பளத்தை இடர்காலக் கடனாகவும். ஐந்து வருடச் சம்பளத்தை வீடமைப்புக் கடனாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

இருபதாயிரம் ஆசிரியர்கள் மேற்படி கடன்களுக்கு விண்ணப்பித்து விட்டு காத்திருக்கின்றார்கள். ஆனால் இக்கடன் விண்ணப்பங்கள் மூன்றாண்டுகள் வரை தாமதித்துக் கிடப்பதாகவும் தேரர் கூறினார்.

## தொல்லை தவிர்ப்புக்குழு களுத்துறைக்குச் செல்வர்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 700வரையான தமிழ் இளைஞர்களைப் பார்வையிடும் பொருட்டு தொல்லை தவிர்ப்புக்குழு அதிகாரிகள் களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

நேற்று முன்தினம் நீதியமைச்சர் பட்டிவீரக்கோன் தலைமையில் நடைபெற்ற தொல்லை தவிர்ப்புக்குழுக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தன் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மேற்படி கைதிகளைப் பார்வையிடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிறைச்சாலைக் கைதிகள் தொல்லை தவிர்ப்புக்குழு, விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு, மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் ஐ சி. ஆர். சி. என்பவற்றுக்கும் மகஜர்களை அனுப்பியுள்ளனர்.

அம்மகஜரில், கைது செய்யப்பட்டவர்களில்90வீதமானவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதென்றும் சிறைச்சாலையில் போதிய நீர்வசதி இல்லாமையால் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(ந- 5)

### ஐ. நா. தூதுவராலய நுண்கருத் திட்டத்தின் கீழ்

# குடாநாட்டில் 16.8 மில்லியன் ரூபா செலவில்

# இவ்வாண்டு அபிவிருத்தித் திட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலய நுண்கருத்திட்டத்தின் கீழ் ரான் அமைப்பின் ஊடாக இவ்வாண்டு குடாநாட்டில் 16.8 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற் கொள்ளப்படவுள்ள திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விபரங்கள் வருமாறு.

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் இயங்கும் பாடசாலைகளுக்கு கதிரை மேசை வழங்க 3 8 மில்லியன் ரூபா,

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து கரவெட்டி, உடுவில் பகுதிகளில் இயங்கி வரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு தலா இரண்டு, அரை கட்டடங்களை அமைப்பதற்கு 10 இலட்சத்து 41 ஆயிரம் ரூபா

நீண்ட காலமாக இடம் பெயர்ந்து மீளவும் தங்கள் இடங்களுக்குச் செல்ல முடியாது முகாம்களில்தங்கியுள்ள 240 குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகள் அமைப்பு,

தலா 53 ஆயிரம் ரூபாசெலவில் அமைக்கப்படவுள்ள இவ் வீடுகள் உடுவிலில்-40, சக்கோட்டை, வியாபாரிமூலை, சுப்பர்மடம் ஆகிய இடங்களில்-76, பருத்தித்துறை கிழக்குமுனையில்-45, பொலிகண்டி, திக்கம் பகுதிகளில்-79 என்ற ரீதியில் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி திட்டத்திற்கான யு. என் ஏச். சி. ஆர் அமைப்பு ரான் ஆகியன தலா 6 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளன.

தீவக மக்களின் நலன் கருதிய அம்புலன்ஸ் வள்ளச் சேவை-2.4 மில்லியன் ரூபா

யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறைக்கு இரு குளிரூட்டிகள் பொருத்த -25 இலட்சம்.

முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூடாக சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்த 4 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி நெறி -6 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா;

மேற்படி அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் பூர்த்தியாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நவாலியில் நடத்தப்பட்டு வரும் மதி ஒளி முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பி. ப. 2. 00 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில்' பிரதம விருந்தினராக வலி தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்து கொள்ளவுள்ளார். [உ]

### அனலைதீவில்

## நடமாடும் பற்சிகிச்சை சேவையை ஆரம்பிக்குக

[ஊர்காவற்றுறை]

அனலைதீவில் நடமாடும் பற்சிகிச்சை சேவையினை வழங்குவதன் அவசியப்பாடு குறித்து அனலைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

மேற்படி பகுதிச் சிறுவர்களில் பலர் பல் நோய்களின் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்ற போதிலும், அதற்குச் சிகிச்சை பெறுவதானால் யாழ். போதனா வைத்தியசாலைக்கோ அன்றி ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கோ செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

இதனால் ஏற்படும் வீண் அலைச்சல் மற்றும் காலதாமதங்களைக் கருத்திற் கொண்டே பற்சிகிச்சைச் சேவை ஆரம்பிக்கப்படுவது குறித்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது. (உ-75)

### பொதுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

வேலணை மேற்கு துறையூர் ஐயனார் சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறும். (உ-75)

### திவ்வியன் வசம் இருந்ததாக கூறப்படும்

## ஆயுதங்களை கொழும்புக்கு அனுப்ப உத்தரவு

[வடமராட்சி கிழக்கு]

யாழ். பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனைநேற்றைய தினம் யாழ் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட போது,

அவர் வசமிருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதங்களை காங்கேசன்துறை பொலிஸ்அதிகாரி ஆர். பி. சி. மோஜஸ் மூலமாக கொழும்புக்கு அனுப்பி இரசாயனப் பகுப்பாய்விற்கு உட்படுத்துமாறும்,

பகுப்பாய்வு அறிக்கையை ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்ட நீதிபதி திவ்வியனை எதிர்வரும் மாதம் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (உ-43)

## காரை நகரில் உள்ளக பேருந்துச் சேவை

### அதன் தேவை குறித்து வலியுறுத்து

[ஊர்காவற்றுறை]

காரைநகர்ப் பகுதியில் உள்ளக பேருந்துச் சேவையினை நடத்த வேண்டுமென அப் பகுதிக் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வட பிராந்திய போக்குவரத்துச் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

ஊர்காவற்றுறை துறைமுகத்திற்கும் காரைநகருக்கும் இடையேயான பயணிகள் பாதைச் சேவையினைக் கருத்திற் கொண்டு குறித்த உள்ளக பேருந்துச் சேவையை நடத்துமாறும்,

இதனால் பல்வேறு தேவைகளுக்காகவும் இவ்விடங்களிற்கிடையே பயணம் செய்யும் அரச ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் நன்மையடைவார்கள் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-75)

### உதைபந்தாட்டப் போட்டி முடிவில்

## அதிருப்தியுற்ற வீரர்கள் மத்தியஸ்தர் மீது தாக்கு

(சுண்டுக்குளி)

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால், தலைவர் கிண்ணத்திற்காக, லீக்கில் அங்கம்வகிக்கும் கழக அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடுமீன் அணி அதனை எதிர்த்து ஆடிய பாஷையூர் சென் அந்தனிஸ் அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

மத்தியஸ்தரினால் கொடுக்கப்பட்ட இத்தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாத ஒருசில சென் அந்தனிஸ் வீரர்கள் அவரைத்தாக்க முனைந்தபோது ஒரு வீரர் அவரைத்தாக்கினார்.

சென் அந்தனிஸ் வீரர்கள் ஒருசிலர் தலையிட்டு மத்தியஸ்தர் தாக்கப்படாது பாதுகாப்பு அளித்ததுடன் மைதானத்தில் நிலவிய பதற்ற நிலையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக யாழ் உதைபந்தாட்ட லீக் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (உ-110)

### 11 வயது சிறுமி மீது

## பாலியல் வல்லுறவு

### குடும்பஸ்தர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

சிறுமிமீது பாலியல் வல்லுறவு கொண்ட குடும்பஸ்தரை அடுத்தமாதம் 5ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறு யாழ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாதிப்புற்ற 11வயதுச் சிறுமியின் சார்பான மனு மீதான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் நீதிபதி திருமதி ச. இளங்கோவன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார். (உ-6)

### நேர்முகப் பரீட்சையில்

## நீதிகிடைக்க வேண்டும்

### அமைச்சர் டக்ளஸுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

மாகாணக்கல்வி அமைச்சில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சையில் தமக்குநீதியைப் பெற்றுத்தருமாறு கோரி பாதிக்கப்பட்டவர்கள்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்:

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 97,98 கல்வியாண்டுகளில்கல் விகற்று பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபோதிலும் தொழில் வாய்ப்பு ஏதுமின்றி நாம் இருக்கும்போது எமக்குப் பின்னர் வெளியேறிய மாணவர்களைக் கொண்டு மாகாணக் கல்வி அமைச்சில் உள்ள வெற்றிடங்களைநிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை மேற் கொள்ளப்படுகின்றது;

இது எமக்கு வேதனையையும் விரக்தியையும்ஏற்படுத்துகின்றது எனவே இதில் தாங்கள் உடனடியாக தலையிட்டு தீர்வுகிடைக்க வழி செய்யுமாறு கேட்கின்றோம்;

இக்கடிதத்தில் தமிழ், ஆங்கிலதட்டெழுத்தாளர், கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர் பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்த 22 பேர் ஒப்பமிட்டு அனுப்பியுள்ளனர். (ந-8)

### சர்வதேச சட்டவாளர்சங்க

## தூதுக்குழுத் தலைவர் இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

சர்வதேச சட்டவாளர்கள் சங்கத் தூதுக்குழுவினர் இலங்கைக்கு வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அடுத்து இத் தூதுக்குழுவின்தலைவர் பிரென்னன் பிரபு. செயலாளர் நீதிபதி கியட் ஆகியோர் இன்று கொழும்பு வந்து சேருவர் என எதிர்பார்க்கப்படுகிறது

இது தொடர்பாக முன்னைநாள் சட்டவாளர் சங்கத் தலைவர் டெஸ்மன்ட் பெர்னாண்டோ தெரிவிக்கையில்; இவர்கள் கொழும்பு வருவதற்கான விசா அனுமதி முன்பு மறுக்கப்பட்டிருந்த போதிலும் இவ் வாரம் அவர்களின் வருகை அனுமதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சு தனக்கு அறிவித்திருப்பதாக கூறினார்.

இதேவேளை,எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. நீதியமைச்சர் பட்டி வீரக்கோன். அரசியற் சட்ட அமைச்சர் ஜீ: எல்: பீரிஸ், வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் ஆகியோருடனான தூதுக்குழுவினரின் சந்திப்பை தான் மீள உறுதி செய்துள்ளதாகவும் டெஸ்மன்ட் பெர்னாண்டோ தெரிவித்தார்:

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவையும் தூதுக்குழுவினர் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமைகளை கண்டறிவதே வருகையின் நோக்கமாகும்: குழுவினரின் வருகை ஜனநாயகத்தைப் பேணுவதில் பெரும் பயனுள்ளதாகவிருக்கும் என்று டெஸ்மன்ட் பெர்னாண்டோ தெரிவித்தார்: (உ)

## பேராசிரியர் துரைராசா நினைவு தங்கப்பதக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழக முன்னாள் துணைவேந்தர் காலஞ்சென்ற பேராசிரியர் அ: துரைராசா ஞாபகார்த்தமாக தங்கப்பதக்கங்கள் வழங்கும்,வகையில் பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரபபட்டுள்ளன.

இப் பதக்கங்கள் பல்கலைக்கழக மற்றும் பீட மட்டத்தில் கல்வித்தலைமை, விளையாட்டு, கலைகள் ஆகியவற்றில் முன்னணி வகிக்கும் மாணவர்களுக்கே வழங்கப் படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை அக்கடமிப் பொறுப்பாசிரியரிடம் பெற்றுப்பூர்த்திசெய்து இப் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது,

மேற்படிதங்கப்பதக்கங்கள் வழங்கல் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ். பல்கலைக்கழக 20 வது பட்டமளிப்பு விழாவில் இடம்பெறும். (உ-6)

### தொழில் நுட்பக்கல்லூரியில் கற்று

## சித்தியடைந்தோருக்கு மூலச்சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழிலநுட்பக் கல்லூரியில், 1999ஆம் கல்வியாண்டில் கற்கை நெறிகளில் சித்தியடைந்தோர்தமதுமூலச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாமெனகல்லூரியின் அதிபர் எஸ். செந்தில்நாதன் அறிவித்துள்ளார்.

தொழில் நுட்பக்கல்லூரியின் பயிற்சித்திணைக்களத்தால் நடத்தப்பட்ட மோட்டார் வாகன திருத்துநர், மின்னிணைப்பாளர், நீர்ப்பம்பி திருத்துநர், ஆகிய பயிற்சி நெறிகளில் சித்தியடைந்தவர்களுக்கான மூல சான்றிதழ்களே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

சான்றிதழ்களைப் பெறும் மாணவர்கள் அலுவலகநாட்களில் வருகை தரவேண்டும் எனவும் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (உ-6)

# செய்தித் துளிகள்

## ஞாபகார்த்த விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இந்து சமயப் பேரவையின் முன்னாள் தலைவர் ஆத்மஜோதி நா முத்தையாவின் ஞாபகார்த்த விழா எதிர் வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு ஏழாலை மேற்கு சைதடி சைவச் சிறுவர் இல்லத்தில், இந்து சமயப் பேரவையின் உப தலைவர் இ. குமாரசுவாமி தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையை யாழ் இந்துசமயப் பேரவைத்தலைவர் சி சக்திகிரிவனும் ஞாபகார்த்தவுரையை யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த்தவுள்ளனர்.

(உ)

## கோவிலில் கள்வர் நடமாட்டம்

(மந்திகை)

ஆலயத்துக்குச் சென்று தரிசனம் செய்தவருடைய மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

கடந்த சனியன்று செல்வச் சந்நிதி ஆலயச்சூழலில் நிறுத்தி விட்டு, ஆலய உட்பிரவாகத்துள் சென்று திரும்பியவேளை தனது மோட்டார் சைக்கிள் காணாமல்போயுள்ளதாக புலோலி தெற்கைச் சேர்ந்த இ ராமு கனகசபை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். [உ-23]

## சுட்டுக் கொலை

[கொழும்பு]

தம்பலகாமம புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் சுந்தர் (வயது-27) என்பவர் இனந்தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பாடசாலை ஒன்றின் முன்னல் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

மேற்படி கொலை பற்றிய விசாரணையை கந்தளாய் பொலிஸ் பிரிவுமேற்கொண்டு வருகிறது. (உ-7)

## வீதியைத் திறக்க கோரிக்கை

## திரிபோஷா எருத்து வருகை

(மந்திகை)

கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைகளுக்குமான ஆயிரத்து 500 திரிபோஷா மா பொதிகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவை மிக விரைவில் விநியோகிக்கப்படவுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-23)

## பாதிப்படைந்த பாடசாலைகளை பார்வையிட்டார்

(மந்திகை)

தென்மராட்சிப் பகுதியில் யுத்த அனர்த்தங்களினால் பாதிப்படைந்த வலயக் கல்வி அலுவலகம் மற்றும் பாடசாலைகளையும் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் பார்வையிட்டார்.

கடந்த ஞாயிறன்று, வலயக் கல்விப் பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள் சகிதம் சென்ற கல்வி அமைச்சின் செயலாளர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மட்டுவில் மகாவித்தியாலயம், நுணாவில் அ.த.க. பாடசாலை, நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றை பார்வையிட்டனர். (உ-23)

## 4 வது கறுப்புப்பட்டி

(ஈச்சமோட்டை)

சோட்டோக்கான் கராத்தே அக்கடமியின் பிரதம ஆசிரியர் டி. அன்ரோடினேஸ் 4வது கறுப்புப்பட்டிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

கடந்த 12 ஆம்திகதி இன்ரநஷனல் யூனிவேசிற்றி போஃர் மார்ஷல் ஆட்ஸ் இன் கொழும்பு தலைமையகத்தில் நடை பெற்ற தரமுயர்த்துதல் பரீட்சையில் இவர் சித்தியடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது (உ-59)

## நீர்வேலி சுற்றி வளைப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை 4 30 மணிமுதல் நீர்வேலிப் பகுதி படையினரால் சுற்றிவளைக்

நம்பிக்கையிழந்து நிற்கும் நம்தமிழர் பிரச்சினைக்கு

# அரசு - ஐ. தே. க. இணைந்து நல்ல தீர்வை காண வேண்டும்

## இரா. சம்பந்தன் வலியுறுத்து

[கொழும்பு]

தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தேசிய பிரச்சினைக்கு நீதியானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான தீர்வொன்றைக் காண்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் முன்வர வேண்டும். இல்லாவிட்டால் நாட்டை எந்தவகையிலும் முன்னேற்ற முடியாது;

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;

தமிழர் என்ற காரணத்தினால், ஆட்சியில் சட்ட பூர்வமான பங்கு கிடைக்காது, பல வழிகளிலும் அடக்குமுறைக்கு ஆளாகும் எமது மக்கள், காப்பாற்றப்படுவோம்என்ற நம்பிக்கையற்ற நிலையில் காணப்படுகின்றனர் அவர்கள் கௌரவமான தீர்வு ஒன்றைக் கொண்டு வரும முயற்சிகளில்தீவிர பங்காற்ற வேண்டும் என்று சர்வ தேச சமூகத்தை எதிர்பார்க்கிறார்கள்;

தமிழர் தேசிய பிரச்சினைக்கு நீதியான தீர்வொன்றைக காண்பதற்கு மாறிமாறி வந்த அரசுகள முயற்சிக்காமையினால் இன்று அது பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது;

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது தொடர்பான விடயத்தில் தற்போதுகாணப்படும் செயலற்ற தன்மை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு புலிகளுடன் பேச வேண்டும்

நோர்வேயின் சமாதான முயற்சியை மீண்டும் இதய சுத்தியுடன்ஆரம்பிக்க வேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு பிரதான இரு கட்சிகளும் கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்திற்கு எந்தவகையான புதுரக ஆயுதங்களைக் கொண்டு வந்தாலும் இராணுவத் தீர்வு ஒன்றைக் காணமுடியாது;

யுள்ளார்; (வ)

## இராசி பலன்

29-8-2001

(ஆவணி 13, புதன்)

ஏகாதசி மு; இ 8.18வரை

பூராடம் பி. இ 1 21 வரை

ராகுகாலம் 12.05-1.35

நல்லநேரம் 4 35-6.05

அமிர்தம, பரிவர்த்தன

ஏகாதசி விரதம்

**மேடம்**

அதிகாரம், மனப்பயம், வயிற்றுக்கோளாறு, முயற்சி தாமதம்.

**இடபம்**

நிலைக்கேடு, துயரமான சமபவம், முயற்சிதடங்கல், நல்லஉணவு கிடைத்தல்.

**மிதுனம்**

திடீர்பயணம், தனலாபம், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும்;

**கடகம்**

தொழில்விருத்தி, பகைவரால்நன்மை, சந்தோசமான நிலை, ஆரோக்கியம்.

**சிங்கம்**

வியாபாரமேன்மை, பிரயான தாமதம், கௌரவக் குறைவு, புத்திரரால்கவலை.

## அரசியல் விளக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டில் தற்போதைய அரசியல்நிலை தொடர்பான விளக்கக்கூட்டம்ஒன்று இன்று பி. ப 3. 00 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோவில் முன்றலில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் கலந்து கருத்துரையாற்றவுள்ளனர்.

(உ-6)

45 வயதைப் பூர்த்தி செய்தோர்க்கு,

## வினைத்திறமை காண் பரீட்சையில் விலக்கு

(மானிப்பாய்)

அரச திணைக்களங்களில் பணி புரியும் 45 வயதைப் பூர்த்தி செய்த சகல அலுவலர்களுக்கும் வினைத் திறமை காண் தடைப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக மாகாண பொது நிர்வாக உள்ளுராட்சி கிராமிய கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

பொது நிர்வாக சுற்றறிக்கை இல: 98 இன் பிரகாரம் சகல திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றிற்கு மேற்படி சுற்றறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன (உ-120)

## பாடசாலைகளுக்கு, தற்காலிக கொட்டகை அமைக்க நிதி ஒதுக்கீடு

(மந்திகை)

யு.என். ஏச். சி ஆர். நுண் கருத்திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் நான்கு அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(யு.என்.ஏச்.சி.ஆர் ...) லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கே இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இருபாடசாலைகளுக்குமாக 10 லட்சத்து 41 ஆயிரத்து 640 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கல்விப் பணிப்

## கொலை

[கொழும்பு]

தம்பலகாமம புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் சுந்தர் (வயது-27) என்பவர் இனந்தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பாடசாலை ஒன்றின் முன்னல் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

மேற்படி கொலை பற்றிய விசாரணையை சந்தளாய் பொலிஸ் பிரிவுமேற்கொண்டு வருகிறது. (உ-7)

---

### வீதியைத் திறக்க

## கோரிக்கை

(மந்திகை)

வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, பல்லப்பை இராணுவ முகாம் அமைந்துள்ள வீதியை மக்கள் பாவனைக்கு திறந்துவிடுமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற திருவிழா முன்னேற் பாட்டுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உற்சவ காலத்தில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையிலேயே மேற்படி வீதியை திறப்பது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-23)

---

## பாடசாலை

### ஓடுகள் திருட்டு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை- அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் முகட்டு ஓடுகள் இரவோடிரவாக திருடர்களினால் களவாடிச் செல்லப்பட்டுள்ளதாகப் பாடசாலையின் அதிபர் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

(உ-120)

---

சோட்டோகான் கராத்தே அக்கடமியின் பிரதம ஆசிரியர் டி. அன்ரோடினேஸ் 4வது கறுப்புப்பட்டிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார்

கடந்த 12 ஆம்திகதி இன்ரநஷனல் யூனிவே சிற்றி போஃர் மார்ஷல் ஆட்ஸ் இன் கொழும்பு தலைமையகத்தில் நடைபெற்ற தரமுயர்த்துதல் பரீட்சையில் இவர் சித்தியடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது (உ-59)

---

## நீர்வேலி

### சுற்றி வளைப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை 4 30 மணிமுதல் நீர்வேலிப் பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் பகுதியில் இருந்து இராசவீதி, நீர்வேலிச் சந்தி வரையான பகுதிகள் இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டு பெருந்தொகையான படையினரால் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும், பொதுமக்கள் சுத்தம் தேவைகளுக்காக வெளியே செல்ல அனுமதிக்கப் பட்டனர். [உ]

---

## வருடாந்த உற்சவம்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

தேர்த் திருவிழா எதிர்வரும் 1 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன.

(உ-75)

---

### மேடம்

அதிகாரம், மனப்பயம், வயிற்றுக்கோளாறு, முயற்சி தாமதம்.

### இடபம்

நிலைக்கேடு, துயரமான சமபவம், முயற்சிதடங்கல், நல்லஉணவு கிடைத்தல்.

### மிதுனம்

திடீர்பயணம், தனலாபம், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும்.

### கடகம்

தொழில்விருத்தி, பகைவரால்நன்மை, சந்தோசமான நிலை, ஆரோக்கியம்.

### சிங்கம்

வியாபாரமேன்மை, பிரயான தாமதம், கௌரவக் குறைவு, புத்திரரால்கவலை.

### கன்னி

கல்விமேன்மை, ரோகபயம், அற்பர் உறவு, மனச் சஞ்சலம்.

### துலாம்

தனலாபம், காரியநன்மை, கூட்டுமுயற்சி, இனியசம்பவம்.

### விருச்சிகம்

பிரியம், திடீர் நன்மை, வீண்விவாதம், காரியதாமதம்.

### தனுசு

தடுமாற்றம், நண்பர்கள் உதவி, நல்லமுயற்சி, மதிக்கப்படுதல்.

### மகரம்

பொருள்விரயம், உணர்ச்சிவசப்படல், காரியதாமதம், வியாதி.

### கும்பம்

உறவினர் வரவேற்பு, காரிய அனுகூலம், பொருள சேர்க்கை, கீர்த்தி.

### மீனம்

கடின உழைப்பு, கீழ்ப்படிவு, நல்லசெய்தி, முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

-வளவன்

---

பூர்த்தி செய்த சகல அலுவலர்களுக்கும் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கிராமிய கூட்டுறவு அபிவிருத்தி [...] ன்கை இல: 98 இன் பிரகாரம் சகல திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றிற்கு மேற்படி சுற்றறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன (உ-120)

---

### பாடசாலைகளுக்கு

## தற்காலிக கொட்டகை அமைக்க நிதி ஒதுக்கீடு

(மந்திகை)

யு.என்.ஏச்.சி ஆர்.நுண் கருத்திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் நான்கு அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இருபாடசாலைகளுக்குமாக 10 லட்சத்து 41ஆயிரத்து 640 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார். (உ-23)

---

### பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள்

## அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

(வவுனியா)

வவுனியாவில் கடமையாற்றிவரும் 33 உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் ஒன்றிணைந்து அடிப்படை உரிமை மீறல்மனுக்களை நேற்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற உதவி இன்ஸ்பெக்டர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்த 146 பேரில் தாம் மாத்திரமே வவுனியாவில் இருந்து சுமார் 60 கிலோமீற்றர் தூரத்திலுள்ள காடுகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும்.

ஒரே நேரத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளபோதும் இவ்வாறுபாரபட்சம்காட்டப்பட்டுள்ளமையானது அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள சமத்துவ உரிமையை மீறும் செயலாகும் எனவும் அவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர். [உ-8]

---

## பயணிகள் பேருந்தில் மீன் ஏற்றப்படுவதாகப் புகார்

(ஊர்காவற்றுறை)

தீவுப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பணிகள் பேருந்தில் மீன்கள் ஏற்றிச் செல்லப்படுவதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாவதாகத் தெரியவருகிறது.

வேலைத் தலங்களுக்குச் செல்வோர் மற்றும் வேறு தேவைகளுக்காகச் செல்வோர் இச்செயல் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (உ-75)

## இன்று ஒரு தகவல்

# பாம்பு பற்றி அறியுங்கள்

பாம்பென்றால் படையும் நடுங்குமென்று சொல்வார்கள்? நாம் நடுங்குவதற்குக் கேட்கவா வேண்டும். பாம்புக்கு மட்டுமா பல்லியைப் பார்த்துப் பயப்படுகிறவர்களும் உண்டு. பாம்புக்கும் கீரிப்பிள்ளைக்கும் சண்டை காட்டப்போகிறேன். பார்த்து விட்டுப் போங்கள் என்று வித்தை காட்டுகிறவர் சொல்லும் போது எல்லோரும் அவரைச் சுற்றி உட்கார்ந்து விடுவார்கள். பாதியில் ஒருவர் எழுந்திருப்பார். நேரம் ஆகிவிட்டது வீட்டுக்குப் போகவேண்டும் என்று. அதைப் பார்த்தவுடன் வித்தை காட்டுகிறவர் சத்தம் போடுவார். யாராவது பாதியில் எழுந்து போனால் அல்லது காசு போடாமல் போனால் நீங்கள் வீட்டுக்குப் போனதும் உங்கள் கண்ணிலேயிருந்து இரத்தம் வரும் என்பார். எழுந்தவர் மறுபடியும் உட்கார்ந்து விடுவார். பாம்பிடம் மனிதனுக்கு இருக்கிற பயத்தைக் காசாக்கிற முயற்சி இது. அதே மாதிரி இந்தப் பயத்தைப் பக்தியாக ஆக்கி விடுவதும் உண்டு.

பாம்புக்கு பழிவாங்கிற குணம் உண்டு என்கிற மாதிரி சிலபுராணக் கதைகள் உண்டு. இப்போதும் சிலர் ஒரு பாம்பை வழியிலே கண்டு அடித்து, அது தப்பிப் போய் விட்டதென்றால் மறுபடியும் அந்த வழியால் நடக்கிறதற்குப் பயப்படுவார்கள். ஏனென்றால் பாப்பு தேடி வந்து பழிவாங்குமாம். பாம்புக்கு பழிவாங்குகிற குணம் இருக்கிறதென்பதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரம் கிடையாது. நான் ஒரு நல்ல பாம்பைப் பார்த்தேன். அதன் தலையில் ஒரு மாணிக்கக்கல் இருந்தது என்று நிஜம் போலவே கதை விடுவார் ஒருவர். அதை நம்புகிறவர் அல்ல அவர். கேட்கிறவர் தலையில் களிமண் இருக்கிறது என்று நம்புபவர் தான் அவர்.

பாம்பின் தலையில் மாணிக்கமும் இல்லை. வைடூரியமும் இல்லை. சில பாம்புகளில் தலையில் கல் மாதிரி ஒரு பொருள உண்டு கெட்டியான திசு அது. அதில் ஒளியொன்றும் வீசாது. கிட்டப் போய் யாரும் உற்றுப்பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். மணல் பாம்பென்று ஒருவகையுண்டு. இந்தப் பாம்பின் தலை கொஞ்ச நாள் வால் பக்கமாக வந்திருக்கும்; வால் பக்கம் தலையிருந்த இடத்திற்குப் போய்விடும் மகுடி ஆடுவதைப் பார்த்து விட்டு இதுவும் தலையை ஆட்டுகிறது, அவ்வளவுதான்

நாம் கூடச் சிலசமயங்களில் இப்படிச் செய்வதுண்டு கச்சேரிசெய்பவர் என்னராகம் பாடுகிறார் என்பதெல்லாம் நமக்கு ஒன்றும் புரியாது. இருந்தாலும் அவர் தலையை ஆட்டிக்கொண்டிருப்பது நமக்குத்தெரியும்; அதைப் பார்த்துவிட்டு நமது தலையையும சும்மா ஏன் வைத்திருக்கவேண்டுமென்று சொல்லி ஆட்டிக்கொண்டிருப்போம்; நம்மைப் பார்த்தவுடன் பக்கத்தில் இருக்கிறவரின் தலையும் ஆட ஆரம்பிக்கும். ஒன்றில் அவர் நமது ரகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். இல்லையென்றால் அவருக்குத் தூக்கம் வந்திருக்கலாம். அது தூக்கந்தான் என்கிறதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் நீங்கள் கொஞ்ச நேரம் பொறுமையாகஇருகக வேண்டும். அது தூக்கமாக இருந்தால் அவரின் தலை உங்கள் தோளில் மோதித் தாளம்போட ஆரம்பிக்கும். ஆதிதாளம் போல இதுமோதிதாளம்.

அது இருக்கட்டும் பாம்பை விட்டு விட்டு வந்து விட்டோமே. பாப்பு தரைமூலம் ஏற்படுகிற அதிர்வுகளைக் கொண்டு சுற்றுச்சூழலைப் புரிந்து கொளகிறது. ஒரு சின்ன அதிர்வு இருந்தால் கூட அது எச்சரிகையாகிவிடும். நண்டு, சிலந்தி, பல்லி மாதிரி பாம்பும் தோலுரிக்கிறது. எதற்காக இபபடிச் செய்கிறதென்பது இன்னமும் நிச்சயமாகத் தெரியவில்லை. பாம்பு தண்ணீர் குடிக்கிறது அபூர்வமான செயல்; ஊர்க் கோயில்களில் பாம்புக்கு பால் வைக்கிறது உண்டு. அதை பாம்பு வந்து குடித்தாலும் தண்ணீருககுப் பதிலாகக் குடிக்கிறது என்றுதான் அர்த்தம்.

பாம்புக்கு பாலென்பது கட்டாயமாகத் தேவைப்படுகிற ஒரு உணவு அல்ல. இருந்தாலும, சிறுத்தை, மான், குரங்கு, இதையெல்லாம் விழுங்கக்கூடிய மலைப்பாம்புகளும் இருக்கின்றன. நாகபாமபின் விஷம் மயிலைப் பாதிப்பதில்லை. ஒருவகையான வான்கோழியையும பாதிக்கிறதில்லை. பொதுவாக உலகத்தில் இருக்கிற பாம்புவகையில் முக்கால் வாசிக்கு விஷம் கிடையாது. மனிதர் ஏதாவது சாதனை செய்து உலகசாதனைப் பட்டியலில் தமதுபெயர் வரவேண்

# அமெரிக்காவின் சமரச முயற்சியை பொ. ஐ. மு. - ஐ. தே. க. நிராகரிப்பு

## வெளியார் தலையீடு தேவையில்லையாம்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண, அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகளை ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் நிராகரித்துள்ளன.

தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண எந்தவொரு வெளிநாட்டுச் சக்தியும் தலையிட வேண்டியதில்லை என்றுகூறி, பிரதான கட்சிகள் இரண்டும் அமெரிக்காவின் முயற்சிக்கு தடைவிதித்துள்ளன

இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண, அதனைத்தடுக்க, எந்தவொரு வெளிநாட்டு தலையீட்டுக்கும் இடமில்லையென்று வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ் விடயத்தில் அரசு வெளிநாட்டவரின் தலையீட்டை தவிர்க்கும் நோக்கில் எதிர்க்கட்சிகளுடன் பேசவுள்ளதாகவும் கதிர்காமர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அமெரிக்காவின் தலையீட்டை விரும்பாமையே ஆளும்கட்சியும் அதனைப் பின்பற்றவேண்டிய நிலைக்கு காரணமென்று தெரியவருகிறது.

இதே வேளை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் இரு கட்சியினரையும் சமரசம்செய்துவைக்க எடுத்த முயற்சி தேவையற்ற விடயமாகிவிட்டதென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (இ)

## சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால்மு ப10.00 மணிக்கு நடத்தப்படும் தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று 'நாளென் செய்யும்' என்ற தலைப்பில் ஆசிரியர் ஏ. சிவநாதனின் சொற் பொழிவு இடம் பெறும். (செ-52)

★ ★ ★

ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றி வருபகந்தர் அநுபூதித் தொடரில் இன்று 'முருகன் திருவடிசரணம்' என்றதலைப்பில் உரையாற்றுவார். (செ)

## தெய்வீக சொற் பொழிவு

(மானிப்பாய்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி இடமபெற்றுவரும் தெய்வீக அருள் சொற்பொழிவுகளில் இன்று ''பக்தியின்பக்கத்துவம்'' என்னும் பொருள் பற்றி யாழ் புதிய உயர் கல்லூரி இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி ச அருள் நங்கை சொற்பொழிவாற்று

## நிமலராஜன் வழக்கு வாக்குமூலம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

பி பி.ஸி செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலைவழக்கு தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குமூலங்களின் பிரதிகள் குற்றத் தடுப்புப் பொலிஸ்அதிகாரி ரஞ்சித்சில்வாவினால் யாழ் நீதிமன்ற நீதிவான் இ. த. விக்கினராஜாவிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிமலராஜன் கொலை வழக்குத் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த த. சுபத்திரன், மற்றும் ஞா. குகநாதன், மு சந்தசாமி, ஜெ. தவமணி ஆகிய நால்வரும் சாட்சியமளித்துள்ளனர்.

இதனைஅடுத்து நிமலராஜன் கொலைசெய்யப்பட்ட இடத்தைஅண்டிய கச்சேரியடி, சுண்டிக்குளி ஆகியபகுதிகளில் உள்ள இராணுவக் காவலரண்களில் கடமையிலிருந்தவர் சிலரின் பெயர் விபரங்களும் நீதி மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இக்காவலரண்களில் கடமையாற்றிய சிலஇராணுவத்தினர் தற்போது வேறுஇடங்களுக்கு மாறிச்சென்றிருப்பதால்அவர்களின் விபரங்களை சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டதை அடுத்து நீதிவான் இ.த.விக்கினராஜா வழக்கை ஒக்ரோபா மாதம் 29ம்திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (வ-6)

மன்னார் பாலியல் வல்லுறவு சம்பவம்:

## சம்பந்தப்பட்ட பொலிஸார் பிணையில் விடுதலை

(மன்னார்)

மன்னார் உப்புக்குளத்தில் இருதமிழ்ப்பெண்களைசித்திரவதைசெய்து பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்திய குற்றத்துக்காக கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டிருந்த படையினர் 14 பேர், வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று பதில் நீதிவான் இராமச்சந்திரன் முன்னிலையில் இடம்பெற்ற விசாரணைகளின் போது கடற்படை சிப்பாய்கள் இருவர், நாசகார தடுப்புப் பிரிவு பொலிஸார் இருவர், மற்றும் பொலிஸார் பத்துப்பேர் உள்ளிட்ட 14 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் 19-ம் திகதி மன்னாரில் தனியார் விடுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட இரு பெண்களும், கொடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், கூட்டாக பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் 23-ம் திகதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரஸ்தாப படையினர் 14 பேரும், தம்மை பிணையில் விடுதலை செய்யுமாறு தனித்தனியாக மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இதனடிப்படையில் நேற்று இடம்பெற்ற விசாரணைகளில் இவர்கள் அனைவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்; (இ)

கக்கல் இருந்தது என்று நிஜம் போலவே கதை விடுவார் ஒருவர். அதை நம்புகிறவர் அல்ல அவர். கேட்கிறவர் தலையில் களிமண் இருக்கிறது என்று நம்புபவர் தான் அவர்.

பாம்பின் தலையில் மாணிக்கமும் இல்லை. வைடூரியமும் இல்லை. சில பாம்புகளில் தலையில் கல் மாதிரி ஒரு பொருள உண்டு கெட்டியான திசு அது. அதில் ஒளியொன்றும் வீசாது. கிட்டப் போய் யாரும் உற்றுப்பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். மணல் பாம்பென்று ஒருவகையுண்டு. இந்தப் பாம்பின் தலை கொஞ்ச நாள் வால் பக்கமாக வந்திருக்கும். வால் பக்கம் தலையிருந்த இடத்திற்குப் போய்விடும் என்பார்கள். இது பொய். இரண்டு பக்கமும் பார்க்கிறதற்கு ஒரேமாதிரி இருக்கிறதனால் வந்த குழப்பம் இது நாகபாம்பும் சாரைப்பாம்புப் இணைந்து இனப்பெருக்கம் செய்கிறதென்று சொல்வதும் தவறு தான்.

இனப்பெருக்கத்தைப் பொறுத்த மட்டும் பாம்பிடம் ஒரு விசேஷம் உண்டு. பாம்பில் முட்டையிடுகிறவகையும் குட்டி போடுகிறவகையும் உண்டு. உதாரணமாக நாகபாம்பு முட்டையிடும்-விரியன் பாம்பு குட்டிபோடும். பாம்புக்கு கண், மூக்கு, நாக்கு எல்லாம் இருக்கிறது. ஆனால் காது இல்லை. அதனால் காற்று மூலம் வரும் ஒலி அலைகளைப் பாமபுகள் உணர்வதில்லை. பாம்பாட்டியின் மகுடி ராகத்தில் மயங்கிப் பாம்பு ஆடவில்லை.

வைக்கிறது உண்டு. அதை பாம்பு வந்து குடித்தாலும் தண்ணீருககுப் பதிலாகக் குடிக்கிறது என்றுதான் அர்த்தம்.

பாம்புக்கு பாலென்பது கட்டாயமாகத் தேவைப்படுகிற ஒரு உணவு அல்ல. இருந்தாலும, சிறுத்தை, மான், குரங்கு, இதையெல்லாம் விழுங்கக்கூடிய மலைப்பாம்புகளும் இருக்கின்றன. நாக பாமபின் விஷம் மயிலைப் பாதிப்பதில்லை. ஒருவகையான வான்கோழியையும பாதிக்கிறதில்லை. பொதுவாக உலகத்தில் இருக்கிற பாம்புவகையில் முக்கால வாசிக்கு விஷம் கிடையாது. மனிதர் ஏதாவது சாதனை செய்து உலகசாதனைப் பட்டியலில் தமதுபெயர் வரவேண்டும்என்று நினைப்பார்கள். சிலர் கண்ணாடிக் கூண்டில் பாம்புகளுடன் சிலநாட்கள் இருந்து காட்டுவார்கள். பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள்.

அப்படிச் சாதனைசெய்த ஒருவர் பாம்புக் கூண்டுக்குள்ளே போகும்போது மிகவும் துணிவாக, தைரியமாக உள்ளேபோனார். சிரித்துக்கொண்டே இருந்தார். பத்து நாள் கழித்து வெளியே வந்தார். உடலெல்லாம் உதற ஆரம்பித்துவிட்டது. பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் என்று கேட்டார்கள். ஒன்றுமில்லை! நான் மறுபடியும் வீட்டுக்குப்போய் குடும்பம் நடத்தவேண்டுமே! அந்த ஞாபகம் வந்துவிட்டது என்றார் □

தென்கச்சிகோ சுவாமிநாதன்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றி வருபகந்தர் அநுபூதித் தொடரில் இன்று 'முருகன் திருடிசரணம்' என்றதலைப்பில் உரையாற்றுவார். (செ)

## தெய்வீக சொற் பொழிவு

(மானிப்பாய்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி இடம பெற்றுவரும் தெய்வீக அருள் சொற்பொழிவுகளில் இன்று ''பக்தியின்பத்துவம்'' என்னும் பொருள் பற்றி யாழ் புதிய உயர் கல்லூரி இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி ச அருள் நங்கை சொற்பொழிவாற்றுவார்.

நாளை 30 ஆம் திகதி பொருளியல் ஆசிரியர் குமாரவேல் ''பிரணவ உபதேசம்'' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

(உ-120)

## கும்பாபிஷேகம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு ஸ்ரீநாகபூசணி அம்பாள் தேவஸ்தான பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிஷேகபெருவிழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

[உ-120]

## உணவு முத்திரைகள் விநியோகம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்த நிவாரணம் பெறுபவர்களுக்கான உலர் உணவு நிவாரண முத்திரைகள் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலரினால் அப் பகுதிக் கிராம சேவையாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

(உ-120)

மன்னார் உப்புக்குளத்தில் இருதமிழ்ப்பெண்களைசித்திரவதைசெய்து பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்திய குற்றத்துக்காக கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டிருந்த படையினர் 14 பேர், வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று பதில் நீதிவான் இராமச்சந்திரன் முன்னிலையில் இடம்பெற்ற விசாரணைகளின் போது கடற்படை சிப்பாய்கள் இருவர், நாசகார தடுப்புப் பிரிவு பொலிஸார் இருவர், மற்றும் பொலிஸார் பத்துப்பேர் உள்ளிட்ட 14 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் 19-ம் திகதி மன்னாரில் தனியார் விடுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட இரு பெண்களும், கொடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், கூட்டாக பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் 23-ம் திகதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரஸ்தாப படையினர் 14 பேரும், தம்மை பிணையில் விடுதலை செய்யுமாறு தனித்தனியாக மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இதனடிப்படையில் நேற்று இடம்பெற்ற விசாரணைகளில் இவர்கள் அனைவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ)

## யாழ். செல்வதாகக் கூறி பஸ்ஸை செலுத்திய சாரதி குருநாகலில் கைது

(கொழும்பு)

ரெயில்வே கடவைகளையும் தாண்டி யாழ்ப்பாணம் நோக்கி பஸ்ஸை செலுத்திய சாரதி ஒருவர் குருநாகல் பொலிஸாரால்கைது செய்யப்பட்டுகுருநாகல்மாஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இவரை எதிர்வரும் 10 ஆம திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் இவருடைய மனநலம் பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைமேற்கொண்டபோதே யாழ்ப்பாணம் செல்வதாகமேற்படி சாரதி கூறியுள்ளார்.

வ)

## 'மைற்ஸ்நோய்' மருந்துதெளிக்க நடவடிக்கை

தென்னை மரங்களில் ஏற்படும் மைற்ஸ் நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்த சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவையாளர்களிடம் அதற்கான மருந்து வகைகளும் தெளிகருவிகளும் தென்னைஅபிவிருத்திச் சபையினால் வழங்கப் பட்டுள்ளன.

இம்மருந்தினைப் பெற்று தெளிக்கவிரும்புபவர்கள் தத்தமது பிரிவு கிராம சேவையாளருடன் தொடர்புகொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகிறது. (உ-120,

## ஆசிரியர் நேர்முகத்தேர்வு தோற்றத்தவறியோர்க்கு மேலும் ஒரு சந்தர்ப்பம்

(மந்திகை)

வடக்கு -கிழக்குமாகாணப் பாடசாலைகளில் தகுதிகாண் தமிழ் மொழிமூல ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு தென்மராட்சி கல்வி வலயத்தில் இருந்து அழைக்கப்பட்டு, குறித்த தினத்தில் அதற்குத் தோற்றாதோர்க்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தவகையில்நாளை30ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் வலய அலுவலகத்தில் நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-23)

### சிவசேனா
## மாவட்ட தலைவர் மரணம் மக்கள் ஒருநாள்கதவடைப்பு

(புதுடில்லி)
மகராஷ்டிரமாநிலம்தானேயில் தனியார் மருத்துவமனையில் சிவசேனா மாவட்டத் தலைவர் ஆனந்ஜிபே மரணமானதையடுத்து அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

அவர் இருநாட்களுக்குமுன் வாகன விபத்தொன்றில்சிக்கி மருத்துவமனையில் அபாய நிலையிலிருந்தார்.

அவர் மரணமான செய்தியறிந்த சிவசேனாத் தொண்டர்கள் மருத்துவமனையைத் தாக்க முற்பட்டதோடு வெளியே நின்றவாகனங்களை அடித்து நொருக்கியும் தீயிட்டுக் கொளுத்தியும்ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆனந்ஜிபேயின் மரணம் சந்தேகத்துக்கிடமாக இருப்பதால் மக்கள் முழுநாள் கதவடைப்பினை நேற்று மேற்கொண்டனர். (க)

## இந்தோனேஷிய அதிபர் மேகவதிக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி

(ஜகார்த்தா)
அதிபர் மேகவதி சுகர்னோபுத்ரிக்கு எதிராக இந்தோனேஷிய ஜகார்த்தா நகரில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடந்துள்ளது

உலகிலே பெரிய இஸ்லாமிய நாடான இந்தோனேஷியாவிற்கு பெண் ஒருவர் ஜனாதிபதியாக வருவதா என்ற கோஷத்துடன் எதிர்ப்புப் பேரணி நடைபெற்றது

நேற்று முன்தினம் 2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இந்தப் பேரணி, ஜனாதிபதி மாளிகை வரை சென்றதாகவும் அதில் பெண் எமது நாட்டுக்கு அதிபராக வேண்டாம். உடனடியாக மேகவதி பதவி விலக வேண்டும் என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டதாகவும் தெரியவருகிறது.

பேரணியின் போது வன்முறைகள் எதுவும் இடம்பெறவில்லை. மேகவதி பதவியேற்று மூன்று மாதத்துக்குள் நடந்த மிகப்பெரிய ஆர்ப்பாட்டப் பேரணி இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## ஈராக்கை வேவு பார்த்த அமெரிக்க விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

(பக்தாத்)
அமெரிக்கத் தன்னியக்க விமானம் ஒன்றை ஈராக்கிய படையினர் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

ஈராக்கின்தென்பகுதிநகரம் ஒன்றின் மேலோகப் பறந்து வேவு வேலையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே மேற்படி ஆளில்லா விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும்.

யூக்கோசிலாவாக்கியாவில் அமெரிக்கா பயன்படுத்தியது போன்ற அதிதொழில்நுட்பம் வாய்ந்த விமானம் இதுவெனவும் ஈராக் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை. படை நடவடிக்கை ஒன்றின் பொருட்டு அனுப்பப்பட்ட தானியங்கி விமானம் ஒன்றை காணவில்லை என அமெரிக்கா அறிவித்துள்ளது. (உ-4)

## மீட்கப்பட்டசட்டவிரோத குடியேற்றவாசிகள் அவுஸ். அழைத்துச்செல்லக் கோரி கப்பலுள் உண்ணாவிரதம்

### ஆத்திரத்தில் மாலுமிகள்மீதும் பாய்ச்சல்

(கன்பரா)
அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்று, பின் நடுக்கடலில் படகோட்டிகளால் கைவிடப்பட்ட 434 பேரும் தம்மை அவுஸ்திரேலியாவிற்குள் அனுமதிக்குமாறுகோரி உணவைப் புறக்கணித்து வருகின்றனர்.

இந்தியா, இலங்கை. இந்தோனேசியா ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்தவர்களான இவர்கள் அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக நுழையும் வகையில் இந்தோனேசியாவில் இருந்து புறப்பட்டுச் சென்றதும்,

இடைவழியில் படகோட்டிகள் இவர்களை நடுக்கடலில் கைவிட்டுத் தப்பிச்சென்றதும்.

பின்னர் இவர்களை நேர்வேநாட்டு கப்பலொன்று மீட்டதும் ஏற்கனவே தெரிந்ததே.

இதேவேளை, இவர்களை அவுஸ்திரேலிய அரசு ஏற்க வேண்டுமென நோர்வே கப்பல் மாலுமிகள் விடுத்த வேண்டுகோளை அந்நாடு ஏற்க மறுத்ததையடுத்து உண்ணாவிரதிகள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் நோர்வே கப்பல் மாலுமிகளைத் தாக்கியதாகவும் தெரியவந்துள்ளது. (உ-7)

### உலக தரிசனம்

## இந்தியாவின் முயற்சி பலிதமாகவில்லை

[புதுடில்லி]
விடுதலைப் புலிகளுக்கு வெளிநாட்டு நிதி உதவிகள கிடைப்பதை கண்டறியும் முகமாக இந்திய மத்திய புலனாய்வுத்துறை (சி பி ஐ) 17 நாடுகளிடம் விபரங்களை கோரியிருந்த போதும் இதுவரை எந்தவொருநாடும் இது தொடர்பான விபரங்களை வழங்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாக சி.பி.ஐ அதிகாரிகள் கனடா சென்றுள்ளனர். (உ-5)

### பலஸ்தீனத்தின்
## விடுதலை இயக்க தலைவர் எறிகணை வீச்சில் பலி

(ஜெருசலேம்)
பலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணியின் தலைவர் அபூஅலி முஸ்தபா, இஸ்ரேலியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 11 மாத காலத்தில் இஸ்ரேல் பலஸ்தீனர்களுக்கிடையேயான மோதலில் பலஸ்தீன தலைவர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது மரணச் சடங்கில் உரையாற்றிய மேற்படி அமைப்பின் பிரமுகர் ஒருவர், இஸ்ரேல் விரைவில் பெரும் அழிவுகளைச் சந்திக்கப்போகிறது எனச் சூளுரைத்தார்.

இக் கொலை சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தெற்கு லெபனான் மற்றும் பலஸ்தீன மேற்குக் கரையோரத்தில் பெருமளவான மக்கள் மறியல் போரில் ஈடுபட்டனர். (உ-4)

## இந்தியா மீது அமெரிக்காவிதித்ததடையை உடன் நீக்க வேண்டும்

(புதுடில்லி)
இந்தியாவிற்கு எதிராக அமெரிக்கா விதித்த தடைகள் விரைவில் நீக்கப்பட வேண்டும் என்பதை தாம் ஆதரிப்பதாக அமெரிக்க செனற் சபை உறுப்பினர் ஜோஷேப்டிபே தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அமெரிக்க ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் வாஷிங்டனில் நடைபெறும் ஐ நா சபைக் கூட்டத்தின் போது முன்னதாக அமெரிக்கா விதித்த தடைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று ஜோஷேப்டிபே கூடியதாக அப் பத்திரிகைச் செய்தி தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மீது தடைகள் விதிக்கப்பட்ட போதும் அதை விலக்கிக் கொள்ளும்படி கேட்க மாட்டேன் என்றும் பாகிஸ்தான் இன்னும் ஜனநாயக வழிக்குத் திரும்பவில்லையென்றும் அவர் தெரி

## தேசிய ஜனநாயக முன்னணியுடன் திருநாமல் காங்கிரஸ் இணைந்தமை

### நிபந்தனையில் அல்ல; அரசியல் நோக்கே

(புதுடில்லி)
தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மீண்டும் தாம் சேர்ந்தது எந்த நிபந்தனையின் பேரிலும் அல்ல, மேற்கு வங்கத்தின் அரசியல் சட்டாயத்தின் பேரிலேதான் என்று திருநாமல் காங்கிரஸ் தலைவி

தார்.

நேற்று முன்தினம் மீண்டும் திருநாமல் காங்கிரஸை வாஜ்பாய் சேர்த்துக் கொண்டதன்பின் செய்தியாளர் மத்தியில் மம்தா பனார்ஜி பேசும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

கப் போராடவுமே தான் சேர்ந்ததாகவும் எந்த வித பதவி மோகமும் தனக்கு இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

ரயில்வே அமைச்சுப் பதவியை மீண்டும் எடுக்கும் யோசனை தனக்கு இல்லை

# தேசிய ஜனநாயக முன்னணியுடன் திருநாமல் காங்கிரஸ் இணைந்தமை

## நிபந்தனையில் அல்ல; அரசியல் நோக்கே

(புதுடில்லி)

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மீண்டும் தாம் சேர்ந்தது எந்த நிபந்தனையின் பேரிலும் அல்ல, மேற்கு வங்கத்தின் அரசியல் சட்டாயத்தின் பேரிலேதான் என்று திருநாமல் காங்கிரஸ் தலைவி மம்தாபனார்ஜி தெரிவித்தார்.

நேற்று முன் தினம் மீண்டும் திருநாமல் காங்கிரஸை வாஜ்பாய் சேர்த்துக் கொண்டதன்பின் செய்தியாளர் மத்தியில் மம்தா பனார்ஜி பேசும்போதே மேற் கண்டவாறு கூறினார். வாஜ்பாயின் கரத்தை வலுப்படுத்தவும், மேற்கு வங்கத்தில் இடதுசாரிகளுக்கெதிராகப் போராடவுமே தான் சேர்ந்ததாகவும் எந்த வித பதவி மோகமும் தனக்கு இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

ரயில்வே அமைச்சுப் பதவியை மீண்டும் எடுக்கும் யோசனை தனக்கு இல்லையென்றும், வாஜ்பாயின் அசைக்க முடியாத நேர்மையும் அவரிடம் தமக்குள்ள விசுவாசமுமே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தம்மை மீண்டும் இணைய வைத்தது என்று மேலும் பேசுகையில் அவர் தெரிவித்தார்.

(து)

## நேபாளத்தில் முதல் சுற்றுப் பேச்சு இவ்வார இறுதியில்?

(காட்மண்டு)

நேபாள அரசுக்கும் மாஓ கிளர்ச்சியாளர்களுக்கும இடையிலான முதலாம சுற்று சமாதானப் பேச்சுவார்த்தை இவ் வார இறுதிக்குள் ஆரம்பிக்கப்படலாமென நேபாள அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேபாளத்தில் அரசுப் படையினருக்கும் மாஓ கிளர்ச்சியாளருக்குப் கடந்த 5ஆண்டு காலமாக மோதல்கள், வன்முறைகள் இடம் பெற்று வரும் வேளையில் இரு தரப்பினரும் சமாதான முன்னெடுப்பில் ஈடுபடுவது இதுவே முதல் தடவை எனவும் அவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

[உ-7]

## கோழிநோய் தடுப்பு மருந்துகள் போதியளவு கையிருப்பில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்திற்கு கோழி நோய்த் தடுப்பூசி மருந்துகளான ரனிக்கற், கம்பேறா, பௌல் பொக்ஸ் ஆகியன போதியளவில் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக உதவிப் பணிப்பாளர் பொ. இராமநாதன் தெரிவித்தார்.

தற்போது மேற்படி மருந்துகள் பங்கிடப்பட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள 10 கால்நடை வைத்திய நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

கோழிநோய்த் தடுப்பு மருந்துகளுக்கு இதுவரை காலமும் இருந்து வந்த தட்டுப்பாடு இனி வரும் காலத்தில் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

(உ-6)

## காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமிற்குச் செல்லவுள்ளார்

இவர் கைதிகளின் உறவினர்களினால் வழங்கப்படும் கடிதங்கள், உடைகள் என்பவற்றை எடுத்துச்சென்று கைதிகளிடம் ஒப்படைப்பார்

கைதிகளினால் அவர்களின் உறவினர்களுக்கு கொடுக்கப்படும் கடிதங்களைக் கொண்டு வந்து கையளிப்பார்.

மேலும் கடந்த சில வாரங்களாக கைதிகளுக்கு உணவு எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது:

(உ-10)

## அமெரிக்காவிதித்ததடையை உடன் நீக்க வேண்டும்

(புதுடில்லி)

இந்தியாவிற்கு எதிராக அமெரிக்கா விதித்த தடைகள் விரைவில் நீக்கப்பட வேண்டும் என்பதை தாம் ஆதரிப்பதாக அமெரிக்க செனற் சபை உறுப்பினர் ஜோஷேப்டிபே தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அமெரிக்க ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் வாஷிங்டனில் நடைபெறும் ஐ. நா சபைக் கூட்டத்தின் போது இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் அமெரிக்க அதிபர் புஷ்ஷும் சந்திப்பார்கள் அதற்கு முன்னதாக அமெரிக்கா விதித்த தடைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று ஜோஷேப்டிபே கூடியதாக அப் பத்திரிகைச் செய்தி தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மீது தடைகள் விதிக்கப்பட்ட போதும் அதை விலக்கிக் கொள்ளும்படி கேட்க மாட்டேன் என்றும் பாகிஸ்தான் இன்னும் ஜனநாயக வழிக்குத் திரும்பவில்லையென்றும் அவர் தெரிவித்ததாக அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

[து]

## ஐ. நா. பொதுச்சபையின் 56வது கூட்டத் தொடரில் சந்திரிகா உரையாற்றுவார்

(கொழும்பு)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ. நா. பொதுச்சபையின் 56 வது கூட்டத் தொடரிலும், ஐ. நா. விசேட சிறுவர் கூட்டத்தொடரிலும் உரையாற்றுவதற்கு இலங்கை ஜனாதிபதியின் பெயரும் ஐ நா. வினால் உத்தியோக பூர்வமாகப் பட்டியலிடப்பட்டுள்ளதும்.

செரெம்பர் 19 ஆம் திகதி தொடங்கும் இந்த விசேட கூட்டத் தொடரில் 75 வரையிலான உலகத்தலைவர்கள் உரையாற்றவுள்ளனர்:

இக்காலத்தில் ஜனாதிபதி குமாரதுங்க ஐ. நா. செயலாளர் நாயகத்தைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை இலங்கையின் ஐ. நா. தூதுவர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது;

அத்துடன், வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷை சமபிரதாய பூர்வமாக சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்துவருகிறது.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் விஜயம் அவ் வேளை நிலவக் கூடிய இலங்கையின் அரசியல் நிலையைப் பொறுத்ததாகவிருக்கும் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)

## மஹோற்சவம் நிறைவு

(கோப்பாய்)

இருபாலை லிங்கப்பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவம் நிறைவு அன்னதான நிகழ்வுகளுடன் நிறைவு பெற்றுள்ளது;

(இ)

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல்
- குறள்

வலம்புரி

## எம்.பியின் மகத்துவம்!

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் சங்கிலியன் படை விட்ட துண்டுப் பிரசுரமொன்று, தமிழ் எம்.பிக்கள் மத்தியில் பெரும் பயப்பீதியையும், அச்சத்தையும் உண்டு பண்ணியுள்ளது. அந்தளவுக்கு அந்தத்துண்டுப் பிரசுரம்என்னதான் கலக்குக் கலக்கியுள்ளது என, பல தரப்பிலிருந்தும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. சங்கிலியன்படை விட்ட துண்டுப் பிரசுரத்தில் பெரிதாக ஒன்றும் தெரிவிக்காவிட்டாலும், தமிழ் எம்.பிக்களுக்குமாரகச் சனி ஆரம்பித்துவிட்டதென்பதே அதன் பொருளாகும்.

சங்கிலியன் படைவிட்ட துண்டுப் பிரசுரம் இலங்கையிலுள்ள சகல செய்தி ஊடகங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டபோதிலும், யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு செய்தி ஊடகம் அதனை இருட்டடிப்புச் செய்து விட்டது. அதற்குக் காரணமும் உண்டு. அது என்னவெனில் தன்னால் வளர்க்கப் படும் பெறுமதியில்லாத ஓர் ஏவலாளி பாராளுமன்ற ஆசனத்தை இழக்க வேண்டி வருமென்பதற்காகவே!

எத்தனை பெரிய அறிவாளர்களும், அரசியல் வல்லாளர்களும் இருந்த பாராளுமன்றஆசனத்தில் தூஷணம் பேசிக் கொண்டு நின்ற பிரகிருதியை அக்கதிரையில் அமர்த்தினால் அது என்ன செய்யும். காலில் கிடக்கும் செருப்பைத்தூக்கிக்காட்டும்.

'வித்துவான்(கள்)' எழுதிக் கொடுப்பதை வாசித்துக் காட்டும், இத்தகைய செயல்களை நல்ல மனிதர்கள் ஒருபோதும் செய்ய மாட்டார்கள்.

மூக்கு முட்டச் சாராயம் கொடுத்து உருளைக் கிழங்கு லொறியில் ஏற்றிச் சென்று வாக்குப் போட வைத்து எம்.பியாக வந்திருந்தாலும், அதற்கொரு பெறுமதி உண்டு. அப் பெறுமதி அவரின் நடத்தையிலும், வார்த்தையிலுமே கணிப்பிடப்படும். பணம் இருக்கிறதென்பதற்காக, எப்படியும் நடக்கலாமென எண்ணினால் அஃது மடமையின் வெளிப்பாடு.

ஏனெனில் வியர்வைசிந்தி உழைக்கின்ற பணமே நிலைக்கும் கள்ளக் கையெழுத்தால் வந்த பணமும், கன்னிப் பெண்களது காசும் ஒரு போதும் நிலைக்காதென்பது உண்மைத் தத்துவம்.

இவையெல்லாம் என்றோ ஒரு நாள் விஸ்வரூபமெடுக்கவே போகிறது. அப்போது அதனை அனுபவித்துத் தானாகவேண்டும்.

# பண்பு பயபக்தியின் அடிப்படையில் வளர்வது

# பெற்றோர், ஆசிரியர் வழிகாட்டுவது அவசியம்

கே. எஸ். சிவஞானராஜா
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்து மனித இனங்களுக்கிடையே பயபக்தி எனும் பண்பு பேணப்பட்டு வருகிறது. ஐயாயிரம் ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த 'பயபக்தி' யானது தற்போதைய காலகட்டத்தில் உணரவும், உணர்த்தவும், உயர்த்தவும் வேண்டிய பாரிய பொறுப்பிலே, சமுதாயம் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள ஆவனபுரிந்திட வேண்டுமென்று, எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அது எவ்வாறு எப்படி எங்கே ஆரம்பமாக வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும்.

### பயபக்தி

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் இவை ஐந்தும் சீற்றம் கொள்ளுமாயின் மனித இனம் தாங்க மாட்டாது. நிலம் நடுங்கினால், நீர்வெள்ளமானால், தீ பரவினால், காற்று சூறாவளியானால்இடி மின்னல் விண்ணில் பயங்கரமாக அதிர்ந்தால் பயம் எம்மிடையே சூழ்ந்து கொள்கிறது. பயம் மேலிடுவதனால் பக்தி பிறக்கிறது. அதன்நிமித்தம் 'பயபக்தி' யாய் ஐம்பூதங்களைப் போற்றுகின்றோம். பயம் இல்லா விட்டால் பக்தி என்பது சக்தியற்றுப் போய் விடுகிறது. ஆகவே இதன்மூலம் நம்பிக்கை, ஈடுபாடு, சத்தியம், நாட்டம், ஒழுக்கம், கருணை, அன்பு, ஆதரவு, பொறுமை, வெற்றி, திருப்தி, சுகம், ஆரோக்கியம் என்பன ஒரு மனிதனிடத்து அதிகரிக்கும்.

### வாழ்வு சிறக்கும்

தெய்வத்தினிடத்து பயபக்தியாக வணங்கும் ஒருவனிடத்து யாவும் சித்திக்கும் பான்மையை அறிகின்றோம். ஒரு ஊரானது செழிப்புடனும், வனப்புடனும் வாழ்கிறது. என்றால், அந்த ஊரிலே உள்ள ஆலயங்கள் அந்தணர்களாலும், மக்களாலும் பயபக்தியாகப் போற்றப்படுகின்றது. என்பது உண்மையே. மந்திரங்கள் தெளிவாகவும், உணர்ந்தும் பயபக்தியோடு உச்சரிக்கப்படும் போது இறைவன் கருணைபுரிகிறான். அதன் மூலம் மக்கள் வாழ்வு சிறக்கின்றது. தெய்வம், அந்தணர்கள், மக்கள், பூமி என எந்தநிலையிலும் மங்களம், மாட்சி பொலிந்து, காட்சியளித்ததுண்மையே. தற்பொழுது முப்பது வீதத்தினர் மட்டும் இறைவன் மீதும், அவனது திருவிளையாடல்கள் மீதும் நம்பிக்கை கொண்டிருக்க, எழுபது வீதத்தினர்பயபக்தியற்றவர்களாகவும், ஏனோ தானோவெனக் கடமைக்கு வழிபடுபவர்களாகவும் உள்ளனர்.

### பக்திச் சூழல் வேண்டும்

பயபக்தியற்ற இந்த எழுபது வீதமானவர்கள் தெய்வீகத்தை உணர வேண்டிய காலம் வரை, ஏனைய நண்பர்களையும் தமக்குச் சாதகமாக்கி, விவாதங்கள் செய்து எமது சமயத்தைநலிவடையச் செய்து விடுகிறார்கள். வருமானம் தேவையென்பதற்காக, கோவில்வீதியெங்சணும் கடைகள் இயங்குவதற்கு அனுமதி வழங்கினால் சோதியாய் நிற்கும் இறைவனின் தெய்வீகச் சூழல் மாசுபடுத்தப்படுகின்றது. என்பதனை யாரும் உணர்ந்திலர். பயபக்தி அற்றுப்போவதைச் சிலர் விரும்புகிறார்கள். என்றகருத்துக்கே வரமுடிகிறது. கடலைகள் குவிந்திருக்க, காப்புகளும் சோப்புகளும் மலிந்திருக்க, ஐஸ் எனப் பழங்களும், கிறீம்களும் வீதிமருங்கிலே பரிந்துரைக்க பஞ்சபுராணங்களையும், பக்திமார்க்கத்தையும் யார்தான் கவனிப்பர்? ஆதலால் ஆலயவாசலில் பயபக்தியான சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆலய நிர்வாகங்களையே சார்ந்ததாகும். சில ஆலயங்கள் பக்திச் சூழலை ஏற்படுத்தியுள்ளன.

மந்திரங்களை உள்ளவாறு பயபக்தியாக உச்சரித்து அர்ச்சனை செய்து புலன்களை ஒருமுகப்படுத்துகின்ற அந்தணப் பெருமக்களை நாம் பணிவோடு வணங்குகின்றோம்.

### சொல் வழி கேட்கிறானில்லை

அடுத்தபடியாக வீட்டிலும் சரி, பாடசாலையிலும் சரி, நாட்டிலும் சரிஒரு குழந்தை, ஒருமாணவன், ஒருஇளைஞன் தவறாக நடக்கும் போதுஒரு சமூகம் பயபக்தியாகக் கண்டிக்காவிடின் அவர்கள் அடுத்த சந்ததிக்குச் சுமையானவர்களாகக் கருதப்படுவார்கள். மாணவனாக இருப்பினும் சரி, இளைஞராகஇருப்பினும் சரி மூத்தவர்களுக்கு பயபக்தியாக நிச்சயம் நடக்கவேண்டுமென்று சமூகம் எதிர்பார்ப்பதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. குழந்தையும் தாய் தந்தையர்க்குப் பணிவுள்ளதாக வளர்க்கப்படாவிடின், அக்குழந்தையால்சமூகத்திற்குஎந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை. மாறாக ஏளனம் செய்கின்ற, நையாண்டி செய்கின்ற, பேதம் பேசுகின்ற, தரக்குறைவாகப் பேசுகின்ற, ஆஸ்திக மற்ற நாஸ்திகம் பேசுகின்ற, பெண்களைமாசுபடுத்துகின்ற அகோரத்தன்மையால் ஆளுகின்ற, விபத்துகளில் சிக்கவைத்து வில்லங்கம்தேடுகின்ற ஒரு சமுதாயத்தைப் படைப்பதற்கோ, உருவாக்குவதற்கோ தற்போதைய அறிவு துணைபோதல் ஆகாது 'சொல்வழி கேட்கிறானில்லை.' என்று தாய், தந்தையர் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கின்றோம். இஃது ஒரு வருத்தமுடைய கவலை தரக் கூடிய வார்த்தைப் பிரயோகமாகும். இந்தப்பிரயோகம் எங்கெல்லாம் பெற்றோரால் பிரயோகிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் பயபக்தி அற்றுப்போய் விட்டதையேகுறிக்கும்காரணம் பல குற்றங்கள்செய்துசெய்துசுகம் கண்டு கொண்டான் என்பதேயாகும். தேவையற்றபணவரவும், தேவையற்ற நண்பர்களும், பொருத்தமற்ற படங்களும், பொருத்தமற்ற சினிமாப் பாடல்களும், பொருத்தமற்ற கலாசாரச் சீரழிவுகளும், பொருத்தமற்ற மேற்குலக ஆடைகளும் எவற்றையுமே, உதாசீனம் செய்கின்ற பண்பற்றஒழுக்கநெறிகளுக்கு இட்டுச் செல்கின்றன. ஆதலால் அவனால் பயபக்தியாக இருக்க முடிவதில்லை. ஈற்றிலே ஏதோ ஒரு குற்றத்திற்காகத் தன்னைத் தானே நொந்து கொள்ள வேண்டியவனாக உணர்கின்றான். பணம் அளவோடு இருக்கும்எளிமையான வாழ்வுதான் பண்பான, பயபக்தியான வாழ்வுக்கு இட்டுச் செல்லும் பணத்தினால் பண்புகளை விலைக்கு வாங்கிவிட முடியாது. மாறாகப் பண்பினால் பணத்தையே குவித்திடச் செய்ய முடியும். பண்பானதுபயபக்தியின்அடிப்படையில் வளர்வது தாயிடம் தந்தையிடம், குருவிடம், தெய்வத்திடம் படிப்படியாகவும், தொடராகவும் வளருகின்ற பக்தி தான் பயபக்தி என்பது; இதில் எந்த இடத்தில் தொய்வு ஏற்படுகிறதோ அங்கே ஒருமனிதனின்வாழ்வு திசை திரும்ப இடமுண்டு. ஆகவே பயபக்திக்குரிய அமைவிடம் மாதா, பிதா, குரு தெய்வமேயாகும்.

### பயபக்திப் பருவம்

மேலும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் எடுக்கும் மாணவனுக்குப் பெற்றோர்களால் வழங்கப்படும் அழுத்தம், எப்படியாவது சித்தி பெற்றிட வேண்டுமெனக் கருதும் பாங்கு பத்து வயதுப் பாலகனுக்குப் புரிந்துவிடுவதில்லை.

பரீட்சை பற்றி உணர முடியாத மாணவன் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் வெறுக்கின்ற கட்டத்தை அடைகிறான். இந்த வயதில் இந்தப் பரீட்சை அவசியந்தானா? என்று கூடச் சிந்திக்கின்றான். விடுபட முடிவதில்லை. ஆறாம், ஏழாம், எட்டாம், ஒன்பதாம் தரம் வரை கண்டிப்பான ஒரு பொதுப் பரீட்சை இல்லாத காரணத்தினாலும், கண்டிப்பும், தண்டனைகளும்அற்றுப் போனதாலும் மாணவர்கள் தப்பித்துக் கொள்ளக் கூடிய குழப்படிகளைச் சொந்தமாக்கிக் கொள்கிறார்கள்இதனால் பயபக்தி என்ற பண்பு வலுவிழந்து கொள்கிறது. இந்தப் பருவங்களில் தான் 'பயபக்தி' வளர்த்தெடுக்கப்பட வேண்டிய தொன்றாகக் கருதப்படுகிறது. நற்சிந்தனைகளை, பெரியார்களின் சந்திப்புக்களை, ஆலய தரிசனங்களை, பங்குபற்றக்கூடிய போட்டிகளை, வீதி ஒழுங்குகளை, மாதா, பிதா, குரு, தெய்வ வழிபாடுகளை, அறநெறிக் கருத்துக்களை, மனனமாக்க வேண்டிய பகுதிகளை ஆளுமைப்பண்புகளை, தலைமைப் பொறுப்புக்களைச் சந்திப்பதற்குப் பத்திலிருந்து பதினான்கு வரையிலான வயது நல்லதொரு தளமாக அமைவதனால் அக்காலப் பகுதி'பயபக்திப் பருவம்' எனப் போற்றப்படுகிறது.

### மனச் சாட்சி

ஒரு ஆசிரியன் பெரும்பாலும், மனச்சாட்சிக்கு அடிபணிந்து, பகவத்கீதையின் சாரத்தை உணர்ந்து தன் கடமையைச்செய்கிறான்; பாடத்திட்டத்தையும், பாடக்குறிப்பையும். உத்தேசத்திகதியையும், கற்பித்த திகதியையும் கண்காணிப்பது தான் கல்வியின் கட்டளை என்று யாராவது கருதினால் எண்ணிய இலக்கினை எய்வதுகடினமே. ஒரு அதிகாரி எப்போதுமே ஒன்றை மறந்து விடலாகாது. எதுவெனில், தனக்கும் மேலே எல்லாவற்றையும்கண்காணிக்கின்றஇறைவன் இருக்கிறான் என்பதுவே அது அது மட்டுமல்ல அறுபது வயதிற்குப் பின்னரும் பயபக்தியோடு ஒரு சமுதாயம வாழ்த்தும் தகுதியைப் பெற வேண்டும்; இதிலே யார் வெற்றி பெறுகிறார்கள்? ஒரு சிலர் மட்டுமே.

இன்று உன்னுடையது.
நாளை வேறொருவருடையது. இந்தத் தத்துவம் யாருக்குப் புரிகிறது? ஆகவே எந்த ஒரு மனிதனும் பயபக்தியான அணுகுமுறைகளை வைப்பாரேயானால் மனிதனும் வாழ முடியும். மனிதமும் வாழ முடியும்.

### இறை பக்தி அவசியம்

எந்த ஒருவீதிக்கும்எவரொருவர் செல்வதென்றாலும்; திரும்பி வீடுவரும் வரை ஒரு தாய் இறைவனை நினைத்த வண்ணம் பிரார்த்திருப்பதனை யாரும் புரிந்திலர். அத்தாயும், இறைவனிடம்வேண்டுவது பற்றி யாருக்கும் விளம்புவதுமில்லை. காரணம் இறைவனைப் பற்றித்- தற்போதைய உலகம் நாகரிகமாகச் சிந்திக்கத் தொடங்கி இருக்கிறதுதுன்பம், வேதனை, பரீட்சை வரும் போதுமட்டும் இறைவனிடம் கையேந்துகின்றார்கள்! ஏனெனில் இந்த உலகத்தில் சுகமாக வாழ நினைக்கிறார்கள் அந்த சுகத்தினை அருள்பவன் இறைவன் ஒருவனே என்பதனை உணர்ந்து, எளிமையாக ஆலயத்திற்குத் தினமும் சென்று பயபக்தியாக விழுந்து வணங்கிட மிகுந்த சிரமம்அடைகின்றார்கள்; தினமும்ஒருவேளையாவது ஆலயம் சென்று மனிதப் பேற்றினையார்உணர்ந்து வழிபடுகிறார்களோ அவர்களுக்கு யாவும் சித்திக்கும்; உலகமும்தலைவணங்கும்! □

## தினசரி தியானம்

ௐ

### பாதுகாப்பு

அத்தன் இருப்பிடத்தை
ஆராய்ந்து பார்த்து நிதம்
செத்த சவம் போல்
திரிவதினியெக்காலம்

\- பத்திரகிரியார்

பரம்பொருளே நான் யாண்டும் உனது பாதுகாப்பில் இருந்து வருகிறேன். அதை நான் மறவா திருந்தால் எனக்குக் குறையொன்றுமில்லை.

செல்வமும் செல்வாக்கும் நமக்கு நல்ல பாதுகாப்பு ஆகமாட்டா. அவை நொடிப்பொழுதில் அழிந்து போம். ஓடும் நதிக்கு அதன் உற்பத்தி ஸ்தானம் உயிர் ஊட்டுகிறது. தெய்வத்திடமிருந்து ஓயாது வரும் பேரியல்பே நமக்கு பாதுகாப்பு ஆகிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## விமானத் தளத் தாக்குதலால் சர்வதேசத்தின் மத்தியில்

# இலங்கை யுத்த நாடாக பிரகடனம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து, சர்வதேசத்தில் இலங்கை பற்றி எழுந்துள்ள அபிப்பிராயத்தை மாற்றியமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

சர்வதேச மட்டத்தில்இலங்கையின் நிலைவரம்குறித்து மாறுபட்ட கருத்துக்களே வலுப்பெற்றுள்ளன இலங்கையின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. அத்துடன் இலங்கை ஒரு போர்ப் பிரதேசமாக உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

இந்நிலையில் இலங்கைக்கான கப்பல்,மற்றும்விமானப் போக்குவரத்தில் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

உல்லாசப் பிரயாணிகளின் வருகை வீழ்ச்சியடைந்ததனால் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் உல்லாசக் ஹோட்டல்கள் மூடுவிழா கொண்டாடவும் வேலையிழப்பு நெருக்கடிகள் ஏற்படவும் வகை செய்து விட்டது.

வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புக்களும் பெருமளவில் குறைந்துள்ளது. ஒட்டுமொத்தமாக பாரிய ஒரு பொருளாதார நெருக்கடியை கட்டுநாயக்கா தாக்குதல் ஏற்படுத்திவிட்டது.

இவற்றையெல்லாம் சரி செய்து சுமுக நிலையை ஏற்படுத்திவிட அரசாங்கம் எடுத்த பகீரதப் பிரயத்தன நடவடிக்கைகளும் தற்போது புஸ்வாணமாகிவிட்டமை அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிடப்பட்டது.

இலங்கை பற்றி தப்பவிப்பிராயத்தை நீக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைவதற்கு கட்டுநாயக்கா தாக்குதல் பற்றி அரச தரப்பினர் வெளியிட்ட முரணான தகவல்களே காரணமென்று இலங்கை கப்பற்துறை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகள் கட்டுநாயக்கா விமானப்படைத்தள தாக்குதல் ஒளிநாடாவை வன்னியில் வெளியிட்டிருப்பதாகவும் அவ் ஒளிநாடா வெளிநாடுகளில்வெளியிடப்பட்டால் இலங்கைபற்றியதப்பவிப்பிராயத்தை நீக்க முடியாது போய் விடுமென்றும் கப்பல் துறை அரசாங்கத்தை எச்சரித்துள்ளது. (இ)

## சங்கிலியன் படையின்..

என்ற துண்டுப்பிரசுரத்தை வலம்புரியின் ஆசிரியர்கள் தயாரித்தார்கள் என்பதற்கு தன்னிடம் ஆதாரம் இருப்பதாகவும் மகேஸ்வரன்மேலும் தெரிவித்துள்ளார்.

### ஆசிரியரின் குறிப்பு

சங்கிலியன் படை விடுத்த துண்டுப்பிரசுரத்தால் சித்தம் கலங்கிய நிலையில் மகேஸ்வரன் எம். பி. செய்தியூடகங்களுக்கு பேட்டி கொடுத்துள்ளார் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. எனினும் 12ம் நூற்றாண்டில் நிலவிய மானிய கால சமுதாயத்தில் இருந்த ஆண்டான் அடிமை முறைபோல் யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் செய்தி ஊடகத்தின் இணை ஆசிரியர் ஒருவர், வலம்புரிக்கும்-மகேஸ் எம்பிக்குமிடையே முரண்பாட்டை ஏற்படுத்தி அதன் மூலம் சுயலாபம் தேட முனைந்த திட்டத்திற்கு மகேஸ்வரன் ஆளாகினார் என்பதையும் எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்கு ஆதாரமாக குறித்த செய்தி ஊடகத்தில் நேற்று வெளியான செய்தியில் இருந்து இதனை அறிய முடியும்.

சங்கிலியன் படை விடுத்த துண்டுப் பிரசுரம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரு செய்தி ஊடகம் தவிர்ந்த வலம்புரிபத்திரிகை உள்ளிட்ட நாட்டின் சகல செய்தியூடகங்களிலும் வெளியாகியிருந்தது அதேவேளை புலிகளின் குரல் வானொலியும் சங்கிலியன் படையால் விடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் பற்றிய செய்தியை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் வலம்புரிப்பத்திரிகையின் குரல் வளையை நசுக்க முனைந்து தோல்வி கண்ட செய்தி ஊடகத்தின் பிரகிருதி ஒருவர் சகுனியின் பாணியில் திட்டமொன்றைத் தீட்டி மகேஸ்வரன் எம்பியுடன் வலம்புரியை முண்டிவிடும் சூழ்ச்சியைத் தயாரித்தார். நல்லதெது கெட்டது எதுவெனத் தெரியாத மகேஸ்வரன் எம். பி வாய்த்ததடா பலாப்பழம் என்பதுபோல் கண்டபாட்டில் விளாசித்தள்ளியுள்ளார். ஐ பி.சி-ரி.பி.சி ஆகிய செய்தி ஊடகங்களுக்கு நடுநிசியில் பேட்டி வழங்குவதற்கான ஏற்பாடுகளையும், பேட்டியைவழங்கும் வசன அமைப்புகளையும் குறித்த செய்தியாளரே தயாரித்துக்கொடுத்தார்.

எதுவாயினும் 1983 இல் தமிழர்களை வெட்டியும் எரித்தும், கொலை செய்த ஐ. தே. கட்சியின் எம்.பியான மகேஸ்வரனுக்கு தமிழர்கள் பற்றியோ அல்லது தமிழீழ விடுதலை பற்றியோ கதைக்கும் அருகதை கிடையாது.

ஒரு காலத்தில் சேர் பொன். இராமநாதனை சிங்களவர்கள் குதிரை வண்டியில் வைத்து இழுத்தனர். ஆனால் மகேஸ்வரன் எம். பி. சிங்கள எம்.பிக்களை வண்டியில் வைத்து மாடு துரத்தினார். கொஞ்சமேனும் கௌரவம் இருந்திருப்பின் மகேஸ்வரன் வண்டிவில் இருக்க சிங்களவர்கள் மாட்டைத் துரத்தினால் மகேஸ்வரனுக்கு மதிப்பு ஆனால் நடந்தது என்ன, தமிழன் ஒருவன் எம். பியாக வந்து எங்களுக்கு வண்டில் காரனாக இருந்தான் என்றபட்டமே கிடைத்தது. இது பற்றி தெரியாத மகேஸ்வரன் வலம்புரி பத்திரிகையை ஈ.பி.டி.பி பத்திரிகையெனக் கூறியுள்ளார்.

கள்ளக் கையெழுத்தும், கபடத்தனமும் செய்து பணம் உழைத்த மகேஸ்வரனுக்கு வலம்புரிப் பத்திரிகையைப் பற்றி கூறும் அருகதையில்லை என்பதை இறுதியாகக் கூறுவதோடு யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற யாழ் கட்டளைத்தளபதி மென்டிஸ்அவர்கள் யாருடைய பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார் என்பதையும், கடலில் கப்பல் போனால் தடம் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருப்பவர் யார் என்பதையும் உரியவர்கள் உரியமுறையில் அறிவார்கள் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம் அதே நேரம்சங்கிலியன்படையின் பெயரில் வலம்புரிதுண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருந்தால் அதனை மகேஸ்வரன் எம். பி. ஆதாரத்துடன் நிரூபித்துக்காட்டுவாரா? முடிந்தால் அரங்கிற்குவரட்டும்நாமும் தயார்.

## இறந்த மகனின் உடலைப் பெற வாகனம் - காணி விற்பனை

[கொழும்பு]

கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையில் இறந்த தனது மகனின் உடலை வீட்டுக்கு எடுத்துச் செல்ல தனது காணியையும் வாகனத்தையும் விற்க வேண்டிய பரிதாப நிலைக்கு குடும்பஸ்தர் ஒருவர் ஆளாகியுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது. மின்சாரசபை ஊழியரான பிரஸ்தாப நபர் கத்திக்குத்துக் காயங்களுக்காக மேற்படி தனியார் வைத்திய சாலையில் ஒன்றரைமாதமாக தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

சிகிச்சை பலனளிக்காத நிலையில் பிரஸ்தாப நபர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

அவர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெற்ற காலத்தில் வைத்தியசாலைக்குச்செலுத்த வேண்டிய ஒரு லட்சத்து 45000ம் ரூபா வை செலுத்தினாலே இறந்த நபரின் உடலைத் தரமுடியும் என்று வைத்தியசாலை நிர்வாகம் பெற்றோரிடம் தெரிவித்திருந்தது. (இ)

### மாதத்தில்

பிக்குமாறு உத்தரவிடப்பட்டதுசந்தேகநபரின் தாயாரை மாதம் ஒருமுறை பார்வையிட அனுமதித்த நீதிவான் சட்டமா அதிபரின் பதில் கிடைக்காததால் அடுத்த மாதம் 11ம் திகதி வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந- 6)

### வவுனியாவில்

தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை அடுத்து சனநடமாட்டம் குறைந்த அப்பகுதியில் இராணுவத்தினர் பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதன்போது எவரும் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை இத்தாக்குதல் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் சனத்கருணரத்தினா கருத்துத் தெரிவிக்கையில் வவுனியாவுக்கு வடமேற்குப் பகுதியில் இருந்து 20கிலோ மீற்றர் தூரத்தில்இக் கிளைமோர்த்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்றும் உழவுயந்திரத்தில் சென்ற அனைவரும் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிப்பகுதியில் கடந்த ஒருவருடகாலத்திற்குள் விடுதலைப்புலிகளின் கிளைமோர்த் தாக்குதல்கள் பரவலாக இடம் பெற்று வருவதும் இதன்போது பெருமளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ4-7)

### பொ. ஐ. ஐ. மு.

இப்பேச்சுவார்த்தைகளின் போது பிரதமராக ரணில் விக்கிரமசிங்காவை நியமிப்பதற்கு இணக்கம்காணப் பட்டது. பிரதி ஜனாதிபதியாக பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்காவை நியமிக்கவேண்டும் என்றும் அரசுப் பிரதிநிதிகள் தமது கோரிக்கையை முன் வைத்தனர்.

ஆணைக்குழு அமைப்பது தொடர்பாகவும் அமைச்சர்கள் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது ஐந்து ஆணைக்குழு அமைக்கவேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சிகோரியது. ஆனால் அரசுதரப்பினர் அரசாங்க ஊடகத்துறை மற்றும் பொலிஸ் ஆணைக்குழு தவிர்ந்த ஏனைய மூன்று ஆணைக்குழுக்களையும் நியமிக்கலாம் என்று தெரிவித்தனர்.

பேச்சுக்களில் ஏற்பட்ட முட்டுக்கட்டையை அடுத்து பேச்சுவார்த்தையில்ஈடுபட்ட இருகுழுவினரும் தத்தமது தலைவர்களுடன் கலந்தாலோசித்தபின்னர் மீண்டும் இரவு 9 மணியளவில் கூடி பேச்சுக்கள் முறிந்தநிலையில் கூட்டறிக்கை ஒன்றை விடுத்தனர். (வ)

## சகல முயற்சிகளும் தோல்வி

# ஒக்டோபர் 10இற்குப் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்படும்?

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பதில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் - ஐக்கியதேசிய கட்சிக்குமிடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததையடுத்து அரசியல் நெருக்கடி நிலை மேலும் வலுவடைந்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேநேரம் பொது ஜன ஐக்கிய முன்னணி ஜே வி. பியுடன் நடாத்திவரும் பேச்சுவார்த்தைகளும், ஜே வி. பியின் இறுக்கமான நிபந்தனைகளால் வெற்றியளிக்காதென்பது உறுதியாகி விட்டது.

இந்நிலையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10ந் திகதிக்குப் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்படுவது உறுதியாகிவிட்டதென அரசியல் ஆய்வாளர்கள் மேலும்கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

### புலிகளின்..

- ★ கப்டன் இளஞ்சுடர் (சுப்பிரமணியம் சிவராசா யாழ்.மாவட்டம்)
- ★ 2 ஆம் லெப்டினண்ட் மணியம் (சுந்தரலிங்கம் சிவகுமார் யாழ்.மாவட்டம்)
- ★ 2 ஆம் லெப்டினண்ட் அறிவமுதன் (மன்னார் மாவட்டம்)

ஆகிய போராளிகளும்தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. (ந-4)

உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்



நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூலலிதாஸ் ஜுவல்லறி
174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-2196)

நகுலா நகைமாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.